சிவாஜி

மானுடர் விதிக்கும் "கிரஹசாரம்"

சந்திர மண்டலத்துக்கு உல்லாச யாத்திரை

கலியுகக் கனவுகள் கால் காணுமா?

அறிவு வேட்கையும், அழிவு வேட்கையும்

கதைக்குக் காலுண்டா என்று கூறுவது வழக்கம். கனவுகளுக்குக் காலுண்டு என்று கலியுக விஞ்ஞானம் கூறுகிறது. இந்தக் கலியுகக் கனவுகளுக்குக் கால் பிறந்துவிட்டால் என்னவெல்லாம் நடக்கும் என்று கற்பனை செய்து பார்க்கும் துணிவு நமது விஞ்ஞானிகளை ஆட்கொண்டிருக்கிறது.

இன்னும் பத்து வருடங்கள் கழித்து நடக்கக்கூடியதாகப் பின்வரும் கற்பனையைச் செய்துபார்க்க விஞ்ஞானம் நமக்கு ஆதாரம் கொடுக்கிறது.

டெலிபோன் மணியடிக்கிறது. குழாயைக் காதிலெடுத்து வைத்தவுடன் சந்திர மண்டலத்துப் பனிமலையில் டெலிபோன் நம்பர் பூஜ்யத்திலிருந்து யாரோ பேசுவது காதில் விழுகிறது. அடுத்த வாரம் கட்டாயம் வந்துபோகவேண்டுமென்று டெலிபோன் மூலம் சந்திர மண்டலவாசியொருவர் பூவுலக நண்பரொருவரை வருந்தியழைக்கிறார். நம்மவர் புவியில் நாட்டாண்மை செய்யும் நரர் ஒருவர் நிலாவுலகில் நிலவும் நாராயணர் ஒருவரைப்பார்க்க ககன மார்க்கமாகக் கடிந்து செல்கிறார்.

கற்பனை அற்புதமாக இருக்கிறது. நிஜமாகிவிடும் என்ற நம்பிக்கை இந்த அற்புதத்தை அதிகப்படுத்துகிறது.

அமெரிக்காவில் யேல் சர்வகலாசாலை என்று ஒரு கலாசாலை இருக்கிறது. அதில் வான சாத்திரம் பயிற்றுவித்துப் பயின்றுவரும் வித்தகர் ஒருவர் புதியதொரு வானத்தேர் ஏறி நிலவு நோக்கிப் பாய்ந்து செல்ல முடியும் என்ற விந்தையை உலகின்முன் கொணர்ந்திருக்கிறார்.

"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்" வண்ணமுறக் குழைத்து ஆங்கே குலாவிடும் "அமுதக் குழம்பினைக் குடித்துக் கோகுல வெறி" படைக்கும் ஆர்வம் அமரகவி பாரதியாரின் கவிதை கண்ட உள்ளத்துத் தனியரசாண்ட தவப்பொருள்.

நிலவைக் குழைக்காமலேயே ஆங்கே குலவிடும் அமுதக் குழம்பைக் குடிக்க யேல் சர்வகலாசாலை விஞ்ஞானி துடித்து நிற்கிறார்.

'அணுசக்தி' என்ற நாமதேயத்தால் மானுடர் கண்டிருக்கும் அற்புதச்சக்தி இத்தகைய வெறிகளுக்கு வளைந்துகொடுத்து உதவி செய்யும் போல் தோற்றுகிறது. பூமியின் ஆகர்ஷண எல்லைக்கு அப்பால் அனுப்பக்கூடிய புதிய கிரஹங்களையே நவீன விஞ்ஞானம் சிருஷ்டி செய்ய முயற்சித்துவருகிறது. இந்த கிரஹங்கள் மற்ற கிரஹங்களைப்போல் ஒழுங்கான முறையில் பூமியைச் சுற்றிவந்து திடீரென்று ஒரு நாள் வெடித்து பூமண்டலத்தையே அழித்து விடவும் கூடும் என்று கூறுகின்றனர் புது யுகத்துப் போர்க்கருவிகளைக் கண்டுபிடிக்கத் துடிக்கும் விஞ்ஞானிகள்.

"பூமண்டலத்தை அழிப்பதற்காகப் புதிய கிரஹமா; வேண்டவே வேண்டாம்" என்று மனித குலம் தடைசெய்து விடுமோ என்ற பீதி இந்த அசுர விஞ்ஞானிகளுக்கு இல்லாமலில்லை.

எனவே, அழிவு வேலைக்குத்தான் இந்த சக்தியை உபயோகிக்க முடியுமென்பதில்லை, சந்திரமண்டல யாத்திரை, செவ்வாய் கிரஹயாத்திரை போன்ற உல்லாஸ யாத்திரைகளுக்குக்கூட இது உபயோகப்படும் என்று வாக்குறுதி அளிக்கின்றனர்.

வானத்தையும், அங்கு நீந்தும் ஒளி மண்டலங்களையும் லட்சிய உலகங்களாகப் பாவிக்கும் கவிஞர் உள்ளத்துக்கு நிலவை நேரே சென்றடைந்துவிடும் யோசனை பிடிக்காமலிருக்கலாம். ஆனால் விஞ்ஞானிக்கு இருக்கும் அறிவுத்தாகம் அவனைக் கற்பனைக்கப்பால் அனுபவத்துக்குள் இட்டுச் செல்லத்துடிக்கிறது.

அறிவு வேட்கை நியாயமானதுதான். அதற்கும் நிபந்தனையுண்டு. கட்டுப்பாடுண்டு. டில்லி நகரத்தில் வதியும் மக்கள் பெரிய நெருப்பில் எப்படித் துடிக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக—அறிவதற்காக—டில்லி நகரத்தைக் கொளுத்த முற்படும் விஞ்ஞானியை நாம் ஏற்றுக்கொள்வோமா? கட்டாயம் மறுப்போம். அதேபோல பூமியை அழிக்கப் புதிய பூதங்களை சிருஷ்டிக்க யாராவது முற்பட்டால் அந்த அறிவு வேட்கையையும் நாம் கண்டிக்கத்தான் செய்வோம்.

அறிவு வேட்கை அழிவு வேட்கையாக இருந்தால் அந்த வேட்கையைச் சுட்டுப்பொசுக்க வேண்டியதே மனித குலத்தின் முதற்கடமை.

பிரதமர் பண்டித நேரு இந்தோனேஷியாவுக்கு உதவி செய்வதற்காக ஆசிய மகாநாடு கூட்டப்போகிறார்

இதனுள்

சிறையும் மீட்சியும்

சந்திர மண்டல - யாத்திரை -

காஷ்மீர் சமாதானம்

மைசூர் நிருபம்

தவமும் பலித்தது

சிறுவர் மலரில் பல புதுப்புது அம்சங்கள்

9-1-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

ஆரும் அத்தியாயம்

சிறையும் மீட்சியும்

திரிப்பக்கில் மொகலாயர் படைத்தளத்துக்குப் பல்லக்குச் சேர்ந்தவுடன் ஆவலுடைய கண்களுடன் படைத் தலைவன் தன் வீரரைப் பார்த்தான். அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. தலைவனது நம்பிக்கைக்கு ஏமாற்றமளிக்க வேண்டுமேயென்று அவர்கள் நடுக்கமுற்றுக் கவலைப்பட்டனர்.

மெல்லிய திரையினுல் மூடப்பட்டிருந்த திரைத் துணியை விலக்கி ஜீஜாவை இறங்கும்படி வேண்டினர் அக்காவலர். ஒரு ஸ்த்ரீ மாத்திரம் இறங்கியதைக் கண்ட மொகலாயர் படைத்தலைவன் ஏமாற்றமேயுற்றுன். தன் வீரர்களை ஒரு முறை பார்த்தான். அவர்கள் மண்டியிட்டுப் பணிந்துவிட்டு மௌனமாக நின்றனர்.

படைத்தலைவன் ஜீஜாவை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். படைத்தளத்தில் ஒரு ஸ்த்ரீ தனித்து நிற்பது அவனுக்கு ஏதோ உறுத்தலை உண்டாக்கியிருக்க வேண்டும்.

"இவரைக் கோட்டைக்கு அழைத்துச் சென்று சிறைப்படுத்தி வையுங்கள். இவரது தேவைகளைக் கவலையோடு கவனியுங்கள்" என்றுன் தலைவன் தன் காவலரை நோக்கி. ஜீஜா மௌனமாகவே நின்றிருந்தாள். அவளுக்கு ஒன்றும் பேசவோ, கேட்கவோ தோன்றவில்லை. தான் எதிரிகளின் கையில் ஒரு கைதி என்ற உணர்வு அவளை மௌனியாக்கியிருக்கலாம். எங்கோ தூரத்தில் காடுகளிடையே உலவிவந்த தன் மகனையும் அவனை எதிரிகளிடமிருந்து காக்கும் பொறுப்பை ஏற்றிருந்த வீரனையும் பற்றி அவள் மனம் சிந்தனையில் மூழ்கியிருந்ததே முக்கிய காரணமாயிருந்திருக்கலாம்.

திரும்பவும் ஜீஜாவைப் பல்லக்கிலேற்றி இரண்டு குதிரை வீரர் கோட்டைச் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

பல்லக்கு கண்ணெட்டும் தூரத்துக்கப்பால் மறைந்த பின்னர் அருகே நின்ற வீரனைக் குறித்துப் பேச ஆரம்பித்தான் படைத் தலைவன்.

"சென்ற காரியம் முடியவில்லையே" என்று நிதானமாகக் கேட்டான்.

"இப்பொழுதே நான் சென்று மேலும் சில வீரரைச் சேர்த்துக்கொண்டு தேடுகிறேன். எப்படியும் அவனை இங்கு கொணர முயற்சிக்கிறேன்" என்றுன் வீரன.

"மகன் தான் முக்கியம், மனைவி முக்கியமல்ல என்று அப்போதே கூறினேனே. உடனே செல். அவனின்றித் திரும்பி வராதே" என்றுன் படைத்தலைவன்.

வீரன் மண்டியிட்டு வணங்கித் தலைவனிடம் விடைபெற்றுக் குதிரையேறிப் பறந்து சென்றுன்.

ஃ ஃ ஃ

ஜீஜா சிறைப்படுத்தப்பட்டிருந்த கோட்டை மொகலாயர் படைத்தளத்தினின்று சுமார் நான்கு மைல் தூரத்தில் அமைந்திருந்தது. இருபது காவலர் அக் கோட்டைக்குப் பாதுகாவல் செய்து வந்தனர்.

ஜீஜாவைத் துன்புறுத்துவதிலோ, அவள் மூலம் அவளது மகனைப்பற்றி அறிவதிலோ மொகலாயர் தலைவன் அக்கறை காட்டாததாலும், அவளை நடத்தும் விஷயத்தில் அவன் தெளிவான உத்திரவு போட்டிருந்ததாலும் சிறைவாசம் ஜீஜாவுக்குக் கொடுமையானதாக இல்லை.

இருந்தபோதிலும் மகனை விட்டுப் பிரிந்திருக்கும் துயரமும், அவன் எதிரிகள் வசம் சிக்காமலிருக்க வேண்டுமே யென்ற கவலையும் அவளை வாட்டாமலிருக்கவில்லை.

குளிர் காலத்தில் மலைகளையும், குன்றுகளையும் பனி மூடி மறைத்தது. வேனிலின் மலர்ச்சியும், காற்றுடன் சேர்ந்து பெருமழையும் மாறி மாறித் தோன்றிப் பருவங்கள் தம் விளையாட்டை நடத்தி வந்தன.

கோட்டைச் சாளரங்கள் வழியே ஜீஜா இப்பருவ மாற்றங்களைக் கண்டு பலவித எண்ணங்களுடன் காலம் கடத்தி வந்தாள்.

தனிமையும், செயலற்ற சிறைவாசமும் அவளை ஏக்கத்துக்காளாக்கின. மகனைப் பற்றிய நினைவு நனவிலும், கனவிலும் எழுந்து அவளை வாட்டி வந்தது.

எத்தனை காலம் இவ்வாறு சிறைவாசம் நடத்துவது? இதற்கு முடிவு எப்போது? இந்தக் கேள்விகள் அவள் மனத்தில் எழுந்து விடைகாண முடியாத புகைப்படலங்களைப்போல் பரவின.

ஜீஜாவின் மௌனம் கோட்டையைக் காத்துவந்த மொகலாயரிடையே அசிரத்தையைத் தான் உண்டாக்கியிருந்தது. யந்திரங்கள் போல் அவளது தேவைகளைக் கவனித்துப் பணிவிடை செய்வதும், மற்ற வேளைகளில் மாறி மாறி வாளுருவிக் காவல் நிற்பதும் அவர்களுக்கு ரசனை யூட்டுவதாயில்லை. அவர்களும் செயலற்ற ஏக்கம் காரணமாக வாடி நின்றனர்.

ஜீஜாவுக்கு சிறையை விட்டுத் தப்ப வேண்டுமென்ற உணர்ச்சி நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டிருந்தது. அதற்கான யோசனைகளை, வழிகளை அவள் மனம் சிந்தித்து வந்தது.

கோட்டையைப் பத்து காவலர் பகலிலும் பத்துபேர் இரவிலும் பாதுகாத்து வந்தனர். இந்தப் பத்து பேரும் முன் பக்கத்தில் கோட்டையை விட்டு வெளியேறும் நேரான வழியில் தான் நூறு கஜத்துக்கு மூவராகவும், அவர்களைக் கடந்து கோட்டையின் எல்லையைக் குறிக்கும் புதாருகே ஒருவனுமாகத் தான் நின்றிருப்பது வழக்கம்.

கோட்டையின் பின்புறம் அடர்ந்த காடாக இருந்தது. அந்தக் காட்டின் ஓரத்து மரங்கள் கோட்டையின் பின்புறத்துச் சாளரங்கள் வரை உயர்ந்து, உராய்ந்து நின்றன. இதை உன்னிப்பாக கவனித்திருந்தாள் ஜீஜா.

ஒரு நாள் பகலில் பின்புறத்துச் சாளரம் ஒன்றின் ஓரமாக நின்று அவள் காட்டுக்குள் கண்ணைச் செலுத்தியபோது ஒரு மைல் தூரத்துக்கப்பால் ஒரு ஒற்றையடிப்பாதை தென்பட்டது. அந்தப் பாதை வளைந்து வளைந்து சென்று புதர்களிடையே மறைந்தது.

தான் நின்றிருந்த சாளரத்தின் கம்பிகளைக் கையால் பற்றிக் குலுக்கிப் பார்த்தாள் ஜீஜா. அது இரும்பாலாகிக் கல்லுக்குள் பதிந்து வலுவாக இருந்தது. அடுத்த சாளரத்தை அடைந்தபோது அதன் ஓரங்களில் கல் விரிசல் ஏற்பட்டுக் கிடந்தது தெரிந்தது. அதைத் தட்டிப்பார்த்தாள். விரிசல் ஓசை நன்முகக் கேட்டதுடன் அந்தக் கல்லோடு சாளரம் சிறிது ஆடுவதும் தெரிந்தது

இந்த உண்மையை அறிந்த ஜீஜா நள்ளிரவில் எழுந்து கோட்டைக்குள்ளிருந்த பெரியதொரு கல்லையே உபயோகித்து அந்த சாளரத்தைச் சிறிது சிறிதாகத் தகர்க்கலானுள்.

முதலில் அதைத் தகர்ப்பது எளிதாகத் தோன்றியபோதிலும் அதைப் பெயர்க்கும் வேலையில் இரண்டு முழு மாதங்கள் கடந்துவிட்டன. கடைசியில் அது ஒருவாறு பாறை விளிம்போடு தகர்ந்தது. அதை இலேசாக ஒட்டி நிற்க வைத்து விட்டு அவள் அன்றிரவு தூங்கச் சென்றுள்.

மறுநாள் பகல் முழுவதும் அயர்ந்து படுத்து உறங்கியபின் அன்று நள்ளிரவில் எழுந்து சாளரத்தை ஓசையின்றி அகற்றி விட்டு, அதன் மேலேறி அடுத்திருந்த மரத்தின் கிளையில் கால்களை ஊன்றி இறங்கிவிட்டாள். உடம்பெல்லாம் கிளைகளிலிருந்த கொப்புகள் உராய்ந்து சிறிது ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

கீழே இறங்கி வேகமாகப் புதர்களினூடே மறைந்து ஓட்டமும் நடையுமாகச் சென்றுள் ஜீஜா. மிருகங்களின் உறுமல் ஓசை காற்றில் மிதந்து வந்தது. அவள் அதைப் பொருட்படுத்தாமல் மேலே சென்றுள்.

ஒற்றையடிப் பாதையை அடையும்போது பின்னிரவில் பாதி கழிந்துவிட்டது. ஒற்றையடிப் பாதையோடு நடந்து செல்வது ஒருக்கால் ஆபத்தாயிருந்தாலும் இருக்கலாம் என்று நினைத்தவளாக அதற்கு ஐம்பது அடிகள் அப்பால் விலகி நேராக நடந்து சென்றுள். கல்லும் முள்ளும் அவளது கால்களைப் பதம் பார்த்தன. வெகு தூரம் கண்களை மூடி நடந்து சென்றுள்.

விடியும் சமயத்தில் அவள் ஒரு கிராமத்தையடைந்தபோது ஒரு பழக்கமான குரல் அவள் காதில் ஒலித்தது. குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பியவள் ஆச்சரியமுற்றுள். சிவனேரில் அவளுக்குப் பாதுகாப்பாக நின்றிருந்த மாராத்திய வீரரில் ஒருவன் அங்கு நின்றிருந்தான்.

(தொடரும்)

Shivaji 9—1—49

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை	திருச்சி, 9—1—49	முற்றுகை
14	சர்வதாரி-ஞு மார்கழி-மீ, 26-உ	6

வயலின் வாக்கு!

வயலின் வாத்தியம் பெண்ணைப் போன்றது. மிருதுவாகவும் சாந்தமாகவும் கையாண்டால் தமது அந்தரங்கத்தின் ஆழத்தில் மறைந்து நிற்கும் அற்புதமான ரகஸ்யங்களை இருவரும் நம்முடன் பகிர்ந்துகொள்ளத் தவறமாட்டார்கள்.

—நீதிபதி ராஜமன்னார்.

குழந்தைகள்

குழந்தைகளை விரும்பாதவரே இருக்க முடியாது. இலைகளின்றி மரம் உண்டா? மனிதர் தம் குழவிகளை வளர்க்க முயற்சி செய்கிறார்கள். உண்மையில் கடவுளே குழந்தைகளை வளர்க்கிறார். குழந்தைகளை நன்றாய் வளர்க்கக் கட்டுப்பாடு வேண்டும், சுதந்திரம் வேண்டும், வேலை கொடுக்க வேண்டும் என்று பலவாறாகக் கூறுகிறார்கள். உண்மையில் இன்பமே குழந்தைகளை வளர்க்க சரியான கருவி.

—ராஜாஜி.

கமிஷன் கண்ட காஷ்மீர் சமாதானம்

பதினான்கு மாதங்கள்

இந்தியாவின் நல்லெண்ணம்

பதினான்கு மாதங்கள்தான். ஆனால் பதினான்கு வருடங்களைப்போல் இருக்கிறது சண்டை ஆரம்பித்து. இன்னொரு விசேடம் என்னவென்றால் இது "சண்டையா", "யுத்தமா", "போலீஸ் நடவடிக்கையா", "தற்காப்புக்காவலா", என்னவென்று விளங்காமலேயே இருந்திருக்கிறது.

காஷ்மீரில் இன்னும் சண்டை நடக்கிறதா என்று ஒருவர் கேட்பதும், இன்னொருவர் "ஆம் நடக்கிறாற்போலத்தான் தெரிகிறது. இருந்தும் இல்லாததுமாய் இல்லையென்று சொல்லிடவும் ஏலாததாய் இருக்கிறது" என்று பதிலிறுக்கவும் இந்தப் பதினான்கு மாதங்கள் நம்மைப் பழக்கப்படுத்தி விட்டன.

இப்படி நடந்துவந்ததன் காரணமென்ன! ஏன் "ப்ளிட்ஸ் கிரீக்" மாதிரி மின்னல் தாக்குதல் நடைபெறவில்லை? இந்திய அரசாங்கம் அசிரத்தையாயிருந்துவிட்டதா? இந்தக் கேள்விகள் கேட்க இடமிருக்கிறது.

இந்தக் கேள்விகளுக்கு இத்தனை காலமாகப் பதில் கண்டுபிடிக்க முடியாமல் தவித்து வந்தவர்களுக்குக் கடைசியாக விடை தெரிந்து போய்விட்டது!

இந்திய அரசாங்கம் இந்தப் பதினான்கு மாத காலத்துக்கு முன்பிருந்தே சண்டைக்குத் தயார் செய்யவில்லை. சமாதானத்துக்கே தீவிரமுயற்சி எடுத்து வந்தது. இந்தியாவின் சமாதான முயற்சிகள் கடைசியாகப் பலனளித்துவிட்டன. 1949-ம் ஆண்டு பிறக்கும்போதே இந்த சுபமான சேதியையும் உலகத்துக்குப் பரிசாகக் கொண்டுவந்தது.

இப்படி நாம் குறிப்பிடுவதெல்லாம் காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சென்ற முதல்தேதியில் ஏற்பட்டு அமுலுக்கு வந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத்தான்.

காஷ்மீரச் சண்டை பதினான்கு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. காஷ்மீரம் இந்தியாவில் சேருவதா, பாகிஸ்தானில் சேருவதா என்பதைக் காஷ்மீரம் தானே தீர்மானிக்க வேண்டும்! ஆனால் ஜுனாகாத் சமஸ்தானத்தில் செய்தது போல காஷ்மீரத்திலும் தானே முடிவுசெய்ய நினைத்தது பாகிஸ்தான். ஆஸாத் காஷ்மீர் என்று ஒரு கூட்டத்தைக் கிளப்பி, அதுதான் காஷ்மீர் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதாகக் கூறிற்று. இந்தக் கூட்டத்துக்கு ராணுவ உதவி செய்ய ஏராளமான பாகிஸ்தான் ராணுவத்தினரையும் தளவாடங்களையும் அனுப்பிற்று.

திடீரென்று காஷ்மீரில் அதிகாரத்தைக் கைப்பற்ற பாகிஸ்தான் சார்பில் ஆஸாத் காஷ்மீர் துருப்புகள் முயன்று முன்னேறின. ஸ்ரீநகர் என்ற தலைநகருக்கே ஆபத்து நேரவிருந்தது.

அப்போது மகாராஜாவுக்கு பீதி ஏற்பட்டது. இந்தியாவுடன் தாம் சேருவதாகக் கூறி இந்தியாவின் உதவியை நாடினார். காஷ்மீர மக்களின் நிகரில்லா நாயகனாக மதிக்கப்படும் ஷேக் அப்துல்லா அப்போது சிறை வைக்கப்பட்டிருந்தார். அவர் காஷ்மீர சமஸ்தான காங்கிரஸ் தலைவர்.

பண்டித நேரு, ஷேக் அப்துல்லா முதலான சமஸ்தான காங்கிரஸ் தலைவர்களது விடுதலையை நிபந்தனையாகச் செய்து காஷ்மீரின் வேண்டுகோளுக்கு அஞ்சல் தந்தார். ஷேக் அப்துல்லா விடுதலை பெற்றார்; மக்களின் பிரதிநிதித்துவமுள்ள புதிய சர்க்கார் அப்துல்லாவின் தலைமையில் உருவாக்கப்பட்டது.

இந்திய விமானங்கள் காஷ்மீர் நோக்கிக் காற்றோடு காற்றாய்ப் பறந்தன. பயந்து நம்பிக்கையற்றுக்கிடந்த காஷ்மீர் மக்களுக்கு இந்திய வீரர் வருகை பெரும் ஆறுதலாயிருந்தது. தலைநகருக்கு வந்த ஆபத்து சடுதியில் நீக்கப்பட்டு எதிரித் துருப்புகள் விரட்டப்பட்டன.

காஷ்மீர மக்களது கோரிக்கையை நிறைவேற்ற இந்தியத் துருப்புகள் சென்றனவேயொழிய ஆக்ரமிக்கவல்ல. ஆக்கிரமிக்கப் பார்த்தவர்களை விரட்டவே சென்றன. காஷ்மீரம் இந்தியாவுடன் சேருவதா பாகிஸ்தானுடன் சேருவதா என்ற பிரச்னை காஷ்மீர் மக்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டுமென்று இந்தியா ஆரம்ப முதற்கொண்டு தன்னலமின்றி வற்புறுத்தி வந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் சூதர் துணையுடன், குற்றம் செய்த பாகிஸ்தான், இந்தியாவின் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்திற்று.

தனது துருப்புகள் காஷ்மீரச் சண்டையில் ஈடுபடவேயில்லை என்று பசப்பிற்று. இந்தியா தான் அக்கிரம ஆக்கிரமிப்பு செய்வதாக வாதாடியது.

ஐக்கிய நாடுகள் சபை காஷ்மீர் விஷயத்தை நேரே பரிசீலனை செய்ய காஷ்மீர் கமிஷன் ஒன்றை அனுப்பிற்று. அந்தக் கமிஷன் தனித்தனியாக டில்லியிலும், கராச்சியிலும் பேச்சு வார்த்தைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பித்தது.

சென்ற ஆகஸ்டு 13-ம் தேதி ஒரு தீர்மானம் கொண்டுவந்தது இக் கமிஷன். அந்தத் தீர்மானத்தை இந்தியா ஏற்றுக் கொண்டது. பாகிஸ்தான் ஒரு மாதம் சும்மா யிருந்துவிட்டு அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. இத்தனைக்கும் கமிஷன், பாகிஸ்தானைக் குற்றவாளியென்று அதன் வாய்மூலமே அறிந்தபின்னரும், அதற்கு சலுகையே காட்டிற்று.

கமிஷன் மேலும், மேலும் விடாப்பிடியாக முயற்சி செய்து ஒருவாறாக 1949-ம் வருடம் பிறந்த நன்னாளன்று காஷ்மீர சமாதானத்தை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறது.

இது வெறும் யுத்த நிறுத்த ஒப்பந்தம்தான். இனி காஷ்மீரில் எங்ஙனம் அரசாங்கம் அமைப்பது, அது எந்தப் பகுதியில் எப்படிச் சேருவது, இதற்கான காஷ்மீர்-பொதுஜன-வாக்கெடுப்பு நடப்பதானால் எப்படி நடப்பது போன்ற விஷயங்கள் இனி பரிசீலிக்கப்படவேண்டும். இவை கடினமான பிரச்னைகள் தான்.

இருந்தபோதிலும் இந்தியா காட்டி வந்திருக்கும் சுமுக மனப்பான்மையும், தாராள புத்தியும், சமாதான ஆவலும் பாகிஸ்தானுக்குப் பாதியாவது இருக்குமானால் இப்பிரச்னைகளை கௌரவமாகத் தீர்ப்பது சிரமமான காரியமல்ல.

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்

நீங்கள் நிச்சயமாக ஓர் உன்னத படத்தை பார்க்கத் தவறுகிறீர்கள். இன்னுமா தாமதம்!

9-1-49 முதல் 11-வது வாரமாக நடைபெறும்

ஜுபிடர் **மோகினி** தமிழ் படம்

V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை, லலிதா, பத்மினி நடித்தது

தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு



அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

உலக யாத்திரை

பள்ளியில் பயிலாத நாயுடு மேல்நாடுகளுக்கெல்லாம் சென்று அருமையான ஆங்கில மொழியறிவுடன் யந்திர நுட்பங்களைப்பற்றிய அருங்கலை ஞானமும் கைவரப்பெற்று விளங்குவது வித்தையினும் வித்தை. அவர் கூறினார் :

"பழக்கத்தின் காரணமாக ஆங்கிலம் எனக்கு அருமையான கருவியாக அமைந்து விட்டது. நான் வெளி நாடுகளில் சென்று பழக ஒரு வாய்ப்பு ஏற்பட்ட போது பிறர் பேசுவதை நன்கு புரிந்து கொள்ளவும் சிறிது சிரமப்பட்டு ஆங்கிலத்தில் எண்ணங்களைக் குறிப்பால் உணர்த்தவும் எனக்குத்திறன் ஏற்பட்டிருந்தது. ஆனால் உலகம் சுற்றித் திரிந்ததன் விளைவாக அந்த அன்னிய மொழி ஆட்சிக்குட்பட்டுவிட்டது."

மேதைகளே இப்படித்தான். அவர்களுக்கு பள்ளிக்கூடம் ஒரு பிரதான அம்சமேயல்ல. புத்தியே போதகனாகவும் எதிரே விரிந்து கிடக்கும் பூமியே புத்தகமாகவும் விளங்குகின்றன வென்பதற்கு நாயுடு அவர்கள் ஒரு அத்தாட்சியாக விளங்குகிறார். முதன்முதலில் அவர் வெளிநாட்டு யாத்திரையை மேற்கொண்ட சம்பவம் மிகவும் ரஸமானது. அவர் வாயிலாகவே அதைக்கேட்போம்.

"1929-ல் ஜெர்மானிய வர்த்தகர் ஒருவர் கோவைக்கு தம்பதி சகிதமாக வந்திருந்தார். ரப்பர் வியாபாரி அவர். இந்தியா முழுமையும் சுற்றிக்கொண்டு அவர்கள் கோவைக்கு வந்தபோது உடல் நலம் மிகவும் கெட்டுப் போய்விட்டது. டிராவலர்ஸ் பங்களாவில் தங்கியிருக்க இடமில்லாது போய்விடவே, எங்களுடைய யுனைடெட் மோட்டார்ஸ் கம்பெனியில் பிரயாணிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் அறையில் இரவைக்கழித்தார்கள். இதையறிந்த நான் அவர்களுக்கு இயன்ற வசதிகள் செய்துகொடுக்க ஏற்பாடு செய்தேன். மிகவும் மகிழ்ச்சியுற்ற அவர்கள் ஒரு தடவை தங்கள் தாய் நாட்டுக்கு வந்து தங்கள் விருந்தினனாகத் தங்கியிருக்கும்படி அன்புடன் அழைத்துவிட்டுப் போனார்கள். மரியாதைக்காக சம்பிரதாயமாக அழைத்தார்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் ஜெர்மனிக்குச் சென்ற பிறகு ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களுடன் ஜெர்மனிக்கு வருமாறு அழைப்பும் அனுப்பிக் கொண்டேயிருந்தது எனக்கும் ஒரு தூண்டுதலாக இருந்தது. 1932-ல் ஐரோப்பா செல்வதாக தீர்மானித்துப் புறப்பட்டும் விட்டேன்.

"கொளும்பிலிருந்து புறப்பட்ட பிரெஞ்சுக்கப்பலில் என்னுடைய முதல் ஐரோப்பிய யாத்திரை தொடங்கியது. இந்த யாத்திரை ஒரு சாகசமென்றே சொல்லவேண்டும். என்னுடன் இரண்டு நண்பர்களும் அச்சமயம் யாத்திரை புறப்பட்டார்கள். நாங்கள் புறப்பட்ட ஐந்தாநாள் எங்கள் கப்பல் நடுக்கடலில் மின் வேகத்தில் தீப்பிடித்துக்கொண்டது. எப்படியிருக்கும் நிலைமை! என்ன செய்வதென்று தெரியவில்லை. பிரயாணிகள் தறிகெட்டு உயிர்தப்ப முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். உடன் வந்த நண்பர்களை மூன்று மணிநேரம் தேடித்திரிந்தேன். கப்பல் எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் லைப்போட் ஒன்றில் சுகமாகச் சென்று ஏறிக் கொண்டு விட்டதையறிந்த பின் நானும் உயிர்தப்ப எண்ணி கடலில் குதித்து ஒருபடகில் தொத்திக்கொண்டேன். ஆங்கிலமாது ஒருத்தியையும், சைனாக்காரி ஒருத்தியையும் காப்பாற்ற வேண்டிய சுமையும் எனக்கு அப்போது ஏற்பட்டு விட்டது. ரஷ்ய எண்ணெய்க்கப்பல் ஒன்றின் உதவியால் நாங்கள் பிழைத்தோம். இதைப்பற்றி நான் மாஞ்செஸ்டரில் இருந்து இந்தியாவுக்கு ஒரு நண்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அந்த சம்பவத்தை விளக்கிக் கூறியிருக்கிறேன்" நாயுடு குறிப்பிட்ட அந்தக்கடிதத்தின் நகலையும் நாங்கள் பார்வையிட்டோம். தனக்கு வந்த கடிதங்கள் அனைத்தையும் அவற்றிற்கு அவ்வப்போது அளித்த விடைகளையும் தொகுத்து நாயுடு அவர்கள் வைத்திருக்கும் முறையே கலை அழகு பொருந்தியது. சில முக்கியமான கடிதப் போக்குவரத்துக்களை அழகுற அச்சிட்டே வைத்திருக்கிறார். தன் சொந்த உபயோகத்திற்கென்றே 'கோபால் பாக்கில்' நாயுடு அவர்கள் நடத்தும் அச்சுக்கூடம் ஒரு தினசரிப் பத்திரிகை நடத்துவதற்கும் அதிகமாக சாதனங்களுடையது. நாயுடு அவர்களின் வாழ்க்கை முழுவதும் நிறைந்த சுவையான அனுபவங்களுக்குச் சரித்திரச் சான்று பகரும் இந்தக்கடிதங்கள் பெரும் பொக்கிஷமாகும். மேலே குறிப்பிட்ட கடிதத்தில் கப்பல் தீப்பிடித்த சம்பவம் பற்றிய வர்ணனையில் ஒரு பகுதி கீழே தருகிறேன்.

"**ஜார்ஜஸ் பிலிப்பர்** கப்பல் தீப்பிடித்த சம்பவத்திலிருந்து சர்வ நாசத்தின் எல்லைக்கோட்டில் மனித மனோபாவத்தின் பல்வேறு சொரூபங்கள் எப்படியிருக்குமென்பதை நான் அறிந்து கொண்டேன். சுகமான வாழ்க்கை யமைப்பில் மனிதர், தாய் தந்தை பிள்ளை பெண்டு என்ற உறவில் — பாசத்தால் கட்டுண்டு தழுவிக்கிடக்கிறார்கள் என்பதையும்—உயிருக்கு ஆபத்து வரும்போது—மரண வாசலில் ஒவ்வொருவரும் தன் தன் உயிரைக்காப்பதில் சிரத்தையுடன் மற்றவரைப்பற்றி முற்றிலும் மறந்தே விடுகிறார்கள் என்பதையும் நேருக்கு நேர் காணமுடிந்தது. இத்தகைய பெரும் சோதனை நேரத்தில், ஏற்றத் தாழ்வுகள், சாதிப்பிரிவுகள், உறவு, நட்பு, தேசபக்தி உயிர் இரக்கம் யாவும் பஞ்சாய்ப் பறந்து போகக்கண்டேன்."

சம்பவங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் நிறைந்துதான் கிடக்கின்றன. ஆனால் அந்தச் சம்பவங்கள் ஒரு உள்ளத்தில் எப்படி எதிரொலிக்கின்றன. வென்பதைக் கவனிக்கும்போது அந்த உள்ளம் எத்தகையதென்பதைக் காணலாகும். நாயுடு அவர்கள் வாழ்வின் சம்பவங்கள் அனைத்தையும் அனுபவக்கடலாகத்துக்கொண்டு அறிவில் ஓங்கி வளர்ந்திருக்கிறார்.

மார்சேல்ஸ் நகரில் சேர்ந்த நாயுடு ஜெர்மானிய நண்பர்களை சந்திக்க விரும்பி **ஹனோவர்** என்னும் அவர்களுடைய வாச நகரம் சென்றார். அங்கு அந்த நண்பர்கள் நாயுடுவின் வருகைக்குப் பெரிதும் மகிழ்ந்து தக்க வசதி செய்தளித்தார்கள். அங்கிருந்து பல ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர்யாத்திரை புரிந்தார். அட்லாண்டிக் மகாசமுத்திரம் கடந்து அமெரிக்க நாடுகளுக்கும் அவர் செல்லத்தவறவில்லை. ஆனால் இந்த யாத்திரையின் போது ஒவ்வொரு நாட்டிலும் மோட்டார் உற்பத்தி, போக்குவரத்து ஏற்பாடுகள் ஆகியவை பற்றிய அனுபவங்களைத் தேடிப் பெறுவதே முதல் வேலையாக இருந்தது. சந்தடியும் ஜன நெருக்கமும் மிகுந்து போக்குவரத்து அதிகமாக இருக்கும் நகரங்களுக்குச் செல்வதும் ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளையும் நிபுணர்களையும் சந்தித்துப் பேசுவதுடன், புதிய புதிய யந்திரக்கருவிகளைக் கண்டுபிடித்திருக்கும் மேதைகளுடனும் அறிமுகம் செய்து கொண்டார்.

இந்தியாவைப்பற்றிய வியப்பும் நம்பிக்கையும் மிகுந்த மேல்நாட்டினரிடையே ஆங்காங்கு சிறு சிறு கூட்டங்களில் பேசுவதும் பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு விடையளிப்பதும், நாயுடுவின் இனிமையான பொழுது போக்காக இருந்திருக்கிறது. இந்த சம்பவங்கள் நாயுடு அவர்கள் ஆங்கிலத்தில் கலை நுணுக்கம் சம்பந்தமான சொற்பெருக்குகள் நிகழ்த்தும் அளவுக்குத் துணை புரிந்திருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து கடல் வழியாக ஜப்பான், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனா, இந்தோ சீனா, மலாயா முதலிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு மீண்டும் இலங்கை வந்து சேர்ந்தார். சுமார் ஒரு ஆண்டு முழுமையும் உலக யாத்திரை முதல் தடவை நடைபெற்றதும்.

திருவள்ளுவர் குரு குலம்

திருச்சி தாலுகா குண்டூரிலுள்ள ஷை குரு குலத்திற்காக ஒரு உதவி நிதிக் கச்சேரி வருகிற ஜனவரி 29-ந் தேதியன்று லால்குடி ஒய். எம். ஐ. ஏ. வில் மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. பாடகர் எம். கே. டி. பாகவதரின் மைத்துனர் திரு. எஸ். டி. முருகபூஷணம். வாகூர் முத்துசாமி அய்யாவர்கள் வயலின். டிக்கட் விபரம் ரூபாய் 2, 1, அணா 8.

In the Court of the District Munsif, Ariyalur.
S. C. 835/48; I. A. 330/48.

Antoni Odayar, S/O Susai Odayar, at Naduvalur Udayarpalayam Taluk-Plaintiff.

Mahalinga Chetty, S/O Sabapathy Chetty at Sri Sailapuram, near Veppathur, Kumbakonam District Munsif. —Defendant.

Take notice that the plaintiff has filed a suit for recovery of Rs. 115—8—0 against you, in the above Court and the case is posted to 21—1—1949 to hear your objections if any. You may appear on that day either in person or through a Vakil, failing which the suit will be decided exparte.

Sd. N. Appadurai,
Advocate for plaintiff.
6-1-49 Ariyalur.

சுதந்திர இந்தியாவில் தேசீய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

கல் சிலேட்டுகள், சாதா, கிளச், ஸ்டோன் பாலிஷ் எல்லா சைஸ்களிலும் வியாபாரி [illegible]

பாபு இண்டஸ்ட்ரீஸ்

டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சினாப்பள்ளி.

பெங்களூர் காஞ்சீவரம் பட்டு சேலைகள் பனாரஸ் ஜரிகை புட்டா தர்பாரு சேலைகள், பேன்ஸி சில்க் வாயில் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள், ட்வீட்டு சில்க் கோடிங் ஷர்டிங் முதலியவை விலை சகாயமாய் கிடைக்கும்.

SLATE MANUFACTURERS & FANCY PIECE GOODS & SILK CLOTH MERCHANTS

மைசூர் நிருபம்

"ரஞ்சினி"

சமீபத்தில் மனிதருள் மாணிக்கமும் சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரியுமான பண்டித ஜவஹர்லால் நேருஜி மைசூருக்கு விஜயம் செய்ததுபற்றி நேயர்கள் தினசரிகளில் படித்திருப்பார்கள்!........நிகழ்ச்சிகளை மைசூர் ஆகாசவாணியின் ஒலிபரப்பு மூலம் கேட்டுமிருப்பார்கள்.! நேருஜியின் மைசூர் விஜயத்தின்போது இங்கே நடைபெற்ற — தினசரிகளில் இடம் பெருத—சில முக்கிய சம்பவங்களைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

பெருக்காத ஒலிபெருக்கி

மைசூர் பொதுமக்களுக்கு இந்தியப் பிரதமர் உபதேசம் செய்ய டௌன்ஹாலில் தடபுடலான ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது....சுமார் மூவாயிரம் ரூபாய் செலவில் எங்கெங்கும் கேட்கும்படி ஒலிபெருக்கி ஏற்பாடு செய்திருந்தார்கள். மூவாயிரம் ரூபாய் செலவழித்து ஏற்பாடு செய்திருந்தவர்கள் ஏனே அதை முன்னதாகவே சரியாகப் பரீட்சை செய்யத்தவறி விட்டார்கள். லட்சக்கணக்காகக் கூடியிருந்த மக்களுக்கு தூரத்தில் நேருஜியின் கதர்க்குல்லாயும், கோட்டும் தெரிந்ததேயன்றி அவரது பொன்மொழிகள் செவியில் விழவேயில்லை. ஒலிபெருக்கி சாத்வீக முறையில் பூரண சத்யாக்ரகம் செய்துவிட்டது.

சத்யாக்கிரகம்

சத்யாக்ரகம்என்றதும்நேருஜி விஜயத்திற்கு முன்பு இதே டௌன்ஹால் மைதானத்தே நடைபெற்ற உண்ணுவிரத நாடகம் நினைவுக்குவருகிறது. ராஜன் அவர்களின் உண்ணுவிரதத்துக்குப் பொதுமக்களின் ஆதரவு இருந்ததாகச் சென்னை பத்திரிகைகள்கூட எழுதியிருக்கின்றன. ஆனல் உண்மையில் டி. ராஜன் அவர்கள் மைசூர் காங்கிரஸ் தலைவர்களின் போக்கைப் பற்றியோ அரசியலமைப்பைப் பற்றியோ பொதுமக்களின் தவிப்பைப்பற்றியோ கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. அவருக்கு துணி வியாபாரத்தில் லைசென்ஸ் கொடுக்கவில்லையாம், ஏராளமாகக்கடன் பளு வேறே இருந்ததாம். அதனுல்தான் அவர் 21-12-48 முதல் உண்ணுவிரதத்தைக் கைக்கொண்டாராம். நள்ளிரவில் அத்துடன் அவர் உண்ணும் விரதத்தையும் கைக்கொள்ள நேர்ந்ததாகச்சிலர் சொல்லுகிறுர்கள். அதைப்பற்றி நமக்கென்ன? அவர் தேசியக் கொடியின்கீழ் கொட்டகையமைக்கச்செய்து அதில் படுத்தபடி பகலில் உண்ணுவிரதமனுஷ்டித்ததை நான் கண்ணுரக்கண்டதுண்டு.

பூரணவெற்றி

அவர் சாகும்வரை உண்ணுவிரதமிருப்பதாகச் சொல்லியிருந்தார். ஆனல்துரதிர்ஷ்டவசமாக நேரு விஜயம் குறுக்கிட்டு விட்டது. அவரை அந்த இடத்தை விட்டுப்போகும்படியும், வேறு நல்ல இடம் தருவதாகவும் 26-ந் தேதி இரவு முனிசிபல் சீப் இன்ஜினியர் சொல்லிப்பார்த்தார். ஊஹூம்' அவர் அசைந்துகொடுக்கவில்லை. கடைசியில் போக்கு வரத்துத் தடை நீக்கத்தைக் கருதிப் போலீசார் லாரியில் அவரைஸ்டேஷனுக்குக் கொண்டுபோனுர்கள். அங்கே அவர் நயத்திலோ பயத்திலோ உண்ணுவிரதத்தின் உள் நோக்கத்தைச் சொல்லியே தீரவேண்டியதாயிற்று. 'தட்டினவர்களுக்குத் திறக்கப்படும்' எனும் பழமொழிக்கேற்ப அவருக்கு அங்கேயே ஜெயில் மேற்பார்வையார் குழுவில் ஒருஉத்தியோகம் கிடைத்துவிட்டது. கதை எப்படி?...நேருஜி விஜயத்தின்போது அவர் உபவாசத்தின் லட்சியத்தில் பூரண வெற்றி பெற்றுவிட்டார்.

உணவு உற்பத்தி

மைசூர் சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அளித்த செலுவாம்பா அரண்மனையை நேருஜி பெற்றுக்கொண்டு அதில் உணவு ஆராய்ச்சிக்கழகத்தை ஆரம்பித்துவைத்தார் — உண்மையில் இங்கே உணவு உற்பத்திவேலையைத்தொடங்கியிருந்தாலும் ஆச்சரியமொன்றுமில்லை. ஏனென்ருல் இந்த அரண்மனையைச்சுற்றியுள்ள மைதானத்தின் விஸ்தீரணம் சுமார் 160 ஏகராவாகும். அரண்மனை எனும் பெயரால் அழைக்கப்படும் இக்கட்டிடம் மிகப்புராதனமானது. கெட்டியானது. இது மைசூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலிக்கிறது.

இங்கே பகலில் நேருஜி விஜயம் செய்தபோது விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன—'ஏது. பட்டபகலிலும் வெளிச்சம் போடுகிறீர்களே" என்று அவர் கேட்ட பின்பு அதை அணைத்தார்கள்.

சிறுமியும் சேதியும்

அங்கேயே சின்னஞ் சிறுமியொருவள் எப்படியோ அவரிருக்குமிடம் சென்று மழலையில் (யாரோசொல்லிக்கொடுத்தபடி) 'எனக்கு ஒரு சேதி சொல்லுங்கள்' என்றுகேட்டபோது, அச்சிறுமியை நேருஜி வாரியெடுத்துக்கொஞ்சி—"குழந்தைகளுக்கு இதுவே என்செய்தி" என்ருர்.

(12-ம் பக்கம் பார்க்க)

— டிஸ்டிரிப்யூட்டர்கள்: —

சென்னை நகர உரிமை: ஸ்ரீ ரத்னு பிக்சர்ஸ், 83, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை 10.

திருவாங்கூர்: பிலிம் டிஸ்ட்ரிபியூட்டிங் கம்பெனி, எர்ணுகுளம்.

கொச்சி, மலபார்: அஸோஸியேடட் பிக்சர்ஸ் லிமிடெட், எர்ணுகுளம்.

மைசூர் வட்டாரம்: ஸ்ரீ. எல். எஸ். ஐயர், சாரதா பிலிம்ஸ், 174, காந்தி நகர், பெங்களூர்—2.

கோயமுத்தூர், நீலகிரி: கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

வட ஆர்காடு, தென் ஆர்காடு, செங்கல்பட்டு, சித்தூர்: ஸ்ரீ. ஏ. கிருஷ்ணசாமி, பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர், 14, பெங்களூர் ரோடு, வேலூர்.

ஸிலோன: வெலிங்டன் டாக்கீஸ் ஸர்க்யூட், 117, புதுச்செட்டித்தெரு, கொழும்பு.

சேலம்: அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்.

ஆந்திரா, ஸீடட், நிஜாம்: சரஸ்வதி டாக்கீஸ் லிமிடெட், விஜயவாடா.

திருச்சி, தஞ்சாவூர்: முத்துமாணிக்கம் கம்பெனி, சிதம்பரம்.

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 9—1—49

இந்தியாவின் பாராளுமன்றம்

சுதந்திர இந்தியாவின் புதிய அரசியலமைப்பு நிர்ணய சபையில் உருவாகி வருகிறதல்லவா? இந்த அரசியலமைப்பின் கீழ் இந்தியாவின் பாராளுமன்றம் எங்கனம் அமையவேண்டுமென்பதுபற்றி நிர்ணய சபை முடிவு செய்திருக்கிறது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மேல்சபை, கீழ்சபை என்று இரு சபைகள் இருப்பது போலவே நமது பாராளுமன்றத்திலும் இருக்கும்.

கீழ் சபையின் மொத்த அங்கத்தினர் எண்ணிக்கை 500-க்கு மேற்படக்கூடாது என்று முடிவாகியிருக்கிறது. இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தியா பல தொகுதிகளாகப் பிரிக்கப்படும். இவ்வாறு பிரிக்கப்படும் தொகுதி ஒவ்வொன்றுக்கும் அதன் ஜனத்தொகை அடிப்படையில் பாராளுமன்ற கீழ் சபையில் பிரதிநிதித்துவம் கிடைக்கும். ஐந்து லட்சம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதிக்கு மேலில்லாமலும், ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதிக்கு குறைவில்லாமலும் அங்கத்தினர் அமைவர்.

இந்தப் பிரதிநிதிகள் நேரடியாக அந்தந்தத் தொகுதி மக்களாலேயே வயது வந்தவர் வாக்குரிமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஜனநாயக முறையின் கீழ் இயங்கும் பாராளுமன்றத் திட்டத்தில் கீழ் சபையே முக்கியமானது. அதற்கு ஜனசபை என்று மற்றொரு பெயரும் உண்டு. கீழ் சபைக்கே அதிகாரம் அதிகமாகவும், பொறுப்பும் அதிகமாகவும் இருக்கும்.

தற்போதுள்ள ஜனநாயக முறையில் பிரதிநிதித்துவ விஷயத்தில் ஜனத்தொகையைத் தவிர வேறு அடிப்படையை எடுத்துக்கொள்வது சாத்யமில்லையாகையால், இந்தியாவின் பாராளுமன்ற அமைப்பும் இங்கனமே அமைந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

இந்தியாபோன்ற பெரிய உபகண்டத்தின் மத்திய பாராளுமன்றம் பல்வேறு கலாசார, நிற, மொழி வகுப்புகளின் பிரதிநிதிகள் கொண்ட சேர்க்கையாயிருக்கும். பொதுப்படையான லட்சியங்களில் எல்லோரும் கூடி ஒத்துழைப்பதில் சிரமம் இருக்காதெனினும், விசேஷமான தனிப்பட்ட பிரச்னைகளில் பரஸ்பர அனுதாபம் பிறப்பது அனுபவத்தில் கஷ்டமாயிருக்கலாம். இதைச் சமாளித்து அனுதாபத்தை வளர்த்துக்கொள்ளக் கூடிய பொறுப்பு ஏற்பட்டால் தான் பல்வேறு பிராந்தியங்களின் கௌரவத்துக்கும், நியாயத்துக்கும் பங்கம் உண்டாகாமல் இருக்கும். இல்லையெனில் கசப்புணர்ச்சியே எஞ்சிநிற்கும்.

தென்னாட்டின் தேவைகள் சரியாக கவனிக்கப்படாமலும், அதன் விசேஷ அறிவு கவனிக்கப்படாமலும், கௌரவிக்கப்படாமலும் இருக்கிறது என்ற பெருங்குறை அகல வேண்டுமானால் டில்லி வட்டாரங்களில் நிலவும் அரசியல், பொருளாதார வாடை மாறவேண்டும்.

இந்தியாவின் ஒருமையிலும், பல்வேறு மக்கட் பகுதிகளின் ஒத்துழைப்பிலும் அக்கரையுள்ளவர்கள் அவர்களிடையே நிலவும் "தங்களுக்கு நியாயம் வழங்கப்படுமோ" என்ற சந்தேகத்தை அகற்ற முயல வேண்டும்.

புதிய பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளில் இந்த இன்றியமையாத நல்லெண்ணத்துக்கு கௌரவம் கிடைத்தால் அதுவே பெரிய பாக்கியமாகும்.

ரயில்வே சமரசம்

ரயில்வே தொழிலாளர் பெடரேஷன் நாகபுரியில் கூடித் தம் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கும் வகையில் வேலை நிறுத்த பாலட் எடுக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அதன்பிறகு அரசாங்கத்தின் சார்பில் விடப்பட்ட அறிக்கைகளும், இவற்றின் தவறை எடுத்துக்காட்டி பெடரேஷன் சார்பில் வெளிவந்த அறிக்கைகளும் சுமுக மனப்பான்மையை உடைத்துவிடுவோ என்று அஞ்சுமாறு தான் இருந்தன. சமரசம் அசாத்தியமாகிவிடுமோ என்ற சந்தேகத்தைக்கூடக் கிளப்பின.

பெடரேஷன் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் சமரசத்தில் தீவிர நம்பிக்கை காட்டியதுடன், ரயில்வே மந்திரி கோபாலசாமியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தாமே வலுவில் முன் வந்தது பாராட்டத்தக்கதாகும்.

சிறு குறிப்புகள்

ஆசிய மகாநாடு

இந்தோனேஷியாவுக்கும், இந்தியாவுக்குமிடையேயுள்ள தொடர்பு எவ்வளவு நெருக்கமானது என்று விளக்க வேண்டியதில்லை. இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர்கள் அனைவரும் புத்துயிர் பெற்றுவரும் ஆசியாவுக்கு இந்தியாவே தலைமை தாங்குகிறது என்ற நம்பிக்கை படைத்திருக்கிறார்கள். கலாசார விஷயத்தில் மற்றைய ஆசிய நாடுகளைவிட இந்தோனேஷியா இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. ராமாயணமும், மகாபாரதமும் இந்தோனேஷிய கலாசாரத்தில் பெரும் மதிப்பு பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய இந்தோனேஷியா சென்ற மகாயுத்தத்தின் இறுதியிலும், யுத்தம் முடிந்தபின்னரும் தன் சுதந்திரத்தை ஸம்பாதித்துக்கொள்ளச் செய்த துணிகரமான வீரப் பெரு முயற்சி இந்தியாவின் கவனத்தைக் கவர்ந்தது. ஆசியாவை விட்டு மேல்நாட்டு ஆதிக்கம் அகல வேண்டிய நாள் நெருங்குவதை உணர்ந்த ஆசியர் அனைவரும் புத்துணர்ச்சி பெற்றனர்.

பண்டிதநேரு இந்தோனேஷியாவின் சாதனைகளை கவனித்து வந்ததோடல்லாமல் அதற்கு இந்தியா உதவி செய்யவேண்டுமென்றும் ஆவல்கொண்டார். இந்தோனேஷியாவின் கஷ்ட காலம் தீர்ந்து ஒளிமலரும் என்று நம்பிக்கை ஏற்படும் தருவாயில் டச்சு ஏகாதிபத்தியம் தன் படைபலத்தை உபயோகித்து இந்தோனேஷியாவைத் தன் பிடியிலேயே வைத்திருக்கத் தீர்மானித்து நடவடிக்கை எடுத்தது.

கொரில்லா யுத்தம், துப்பாக்கிச் சண்டை, பிரிவுபட்ட ஆக்கிரமிப்பு, சமரசப் பேச்சு, ஐக்கிய நாடுகள் சங்க ஆலோசனைகள், மத்தியஸ்தங்கள் இவ்வளவும் மாறிமாறியும், ஒரே சமயத்திலும் இதுகாறும் நடந்து வந்திருக்கின்றன. பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

டச்சு ஏகாதிபத்தியம் புத்திசாலித்தனத்தில் பிரிட்டிஷ், அமெரிக்க ஆதிக்கங்களைப் பின்பற்றிக்கொண்டு விட்டதோடல்லாமல், இன்னும் புத்தி ஏற்படாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம்.

டச்சு ஏகாதிபத்தியம் உலக நாடுகளின் உணர்ச்சிகளைக்கூட மதியாமல் யுத்த நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி வருகிறது. இந்தோனேஷிய மக்கள் தம் குரலை எழுப்பி ஆசியநாடுகளின் உதவியைக் கோரியிருக்கிறார்கள்.

பிரதமர் பண்டிதநேரு முன்னம் டில்லியில் பொலிவுற நடந்த ஆசிய மகாநாட்டைப்போல் ஒரு அவசர மகாநாடு கூட்டும் யோசனையிலிருக்கிறார். இலங்கை, பர்மா, ஆஸ்திரேலியாபோன்ற நாடுகள் இந்த யோசனையை உற்சாகத்துடன் வரவேற்றிருக்கின்றன.

மகாநாடு கூடு முன்னரே டச்சுப் பிரதமர் இந்தோனேஷியா பறந்து சென்று சமரச முயற்சிக்கு முயலுவதாகக் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதே. டச்சு ஏகாதிபத்தியம் ஆசிய நாடுகளின் கௌரவத்தையும், உரிமைகளையும் மதிக்காமல் நடக்குமானால் அதற்கு என்ன கதி ஏற்படுமென்பதை விவரிக்கத் தேவையில்லை.

காரியதரிசி காளா

ராஷ்டிரபதி பட்டாபி நமது மாகாண ரெவின்யூ மந்திரி காளா வெங்கட்ராவை காங்கிரஸ் காரியதரிசியாகப் பொறுக்கியெடுத்திருக்கிறார். புதிய பொறுப்பைக் காளா ஏற்கு முன் தமது மந்திரி பதவியை ராஜினாமா செய்துவிடவேண்டும்.

புதிய மந்திரி நியமிக்கப்படும் வரையில் காளாவையே பதவி வகிக்குமாறு சென்னை அரசாங்கம் கூறலாமென்று ஒரு வதந்தி உலவுகிறது. காளா ராஜினாமா கொடுத்துவிட்ட தகவல் கிடைத்திருக்கிறது.

அதிகார பூர்வமான வட்டாரங்களினின்று வெளிப்படும் தகவல்கள் வேறுவித சூசகங்களைத் தருகின்றன. பக்தவத்ஸலமவர்கள் ரெவின்யூ மந்திரி பதவிக்கு உடனடியாக மாற்றப்படலாமெனவும் அவரது இலாகா பொறுப்பையும் கனம் சந்திரமௌளி ஏற்கலாமெனவும் புதிய மந்திரி நியமனத்தையே ஒத்திப்போட முயற்சிப்பதாகவும் சில வதந்திகள் கூறுகின்றன. ஊகம் செய்வது அவசியமற்ற விஷயமாயினும் காலி இடத்துக்குயார் வரப் போகிறார்கள் என்பதில் பொது மக்களுக்கிருக்கும் அக்கரை நியாயமானதே.

சினிமா பகுதி

❀ வரும் பொங்கலுக்குப் பல நாட்களாக ரசிகர்களின் பொறுமையைச் சோதித்துக்கொண்டிருந்த பல படங்கள் திரையிடப்படப்போகின்றதாம். அந்த வரிசையில் கிருஷ்ணு பிக்சர்ஸின் '**கிருஷ்ண பக்தி**'யும் ஒன்று. மறந்த நீதிகளை விளக்கும் மகத்தானபடமாக இருக்கப்போகிறதாம் கிருஷ்ண பக்தி. கிருஷ்ண பக்தராக சின்னப்பாவும் அவரை பக்தராக மாற்றிய தாசியின் பாகத்தை ராஜகுமாரியும் ஏற்றுத் திறம்பட நடித்துள்ளார்களாம். சின்னப்பா இதில் செவிக்கு இனிய பல பாடல்களைப்பாடியுள்ளாராம். இவர்களைத்தவிர ஹாஸ்ய நட்சத்திரங்களான கிருஷ்ணன் மதுரம் வேறு இருக்கிறார்கள். டைரக்ஷன் பொறுப்பை R. S. மணி ஏற்றுக்கொண்டிருக்கிறார். படத்தின் பெருமைக்கும் அவர்தானே பொறுப்பாளி!

❀ **கீத காந்தி**-யும் பொங்கல் வெளியீடாக இருக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படத்தின்மூலம் டைரக்டர் சுப்ரமணியத்தின் புகழ் ஓரேயடியாக உயரப்போவதென்னவோ உண்மைதான். உள்ள முருக்கும் கதை. நெஞ்சையள்ளும் கற்பனை. கர்ணாமிர்தமான கீதங்கள். பிரமாதமான நடிப்பு. இவ்வளவும் கீத காந்தியில் உண்டு என்கிறது, சென்னைக்குப்போய் வந்த சிட்டுக்குருவி ஒன்று!

❀ அடுத்ததாக நம் கவனத்தைக்கவருவது '**நல்ல தம்பி**'யார்தான். புரட்சிகரமான இந்தத் தம்பியை மக்கள் ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருப்பதில் வியப்பில்லை அல்லவா? தமிழர் திருநாளான பொங்கல் நன்னளில் புதுமைக் கருத்துக்களைக் கொண்ட இந்தத்தம்பியார் பவனி புறப்படுவாரா?

❀ தற்கால நாகரீக உலக ஊழல்களைக் கிண்டல் செய்யும் வகையில் ஏ. வி. எம். காரர்கள் தங்கள் அடுத்த படமான **வாழ்க்கை**யைப் பிடிக்கப்போகிறார்களாம். கதை வசன டிபார்ட்மெண்ட் ப. நீலகண்டன் தான்! டி. ஆர். ராமச்சந்திரன், காளி என். ரத்னம், சாரங்கபாணி முதலிய நகைச்சுவை மணிகளை எல்லாம் இதில் பயன்படுத்திக்கொள்ளப்போகிறாராம்.

❀ 'லைலா மஜ்னு' கதை புதிதல்ல. காதலின் வேகத்துக்கு எடுத்துக்காட்டான இந்தக்கதை உலகப்பிரசித்தி பெற்றது. இதை தமிழில் தர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ராஜம்மா, மகாலிங்கம் நடிக்கும் இதை நியூடோனில் நாகூர் வளர்ப்பார் என்று தெரிகிறது.

❀ 'அரவிந்த்' புரொடக்ஷன் ஸாரின் '**காளி நாசன்**' என்ற படத்தில் மகாலிங்கம், வசந்த கோகிலம் சகஸ்ரநாமம், முதலியோர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்களாம். ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் இது தயாராகும்.

❀ தடைபட்டு நின்றுபோயிருந்த **அம்பிகாதேவி** மறுபடி வளரத் தொடங்கிவிட்டாளாம். மகாலிங்கம், ராஜம்மா நடிக்கும் இதை நியூடோனில் டி. ஆர். கோபு டைரக்ட் செய்கிறார்.

❀ மகாலிங்கம், பி. எஸ். சரோஜாவுடன் தோன்றும் **பாரிஜாதம்** சோபனசலாவிலிருந்து நியூடோனுக்கு மாற்றப்பட்டுவிட்டது. இனி மளமளவென்று வளரவேண்டியதுதானே! இதை ஏ. டி. கே. டைரக்ட் செய்கிறார்.

❀ ராகினியாரின் **தூக்குத் தூக்கியில்** மகாலிங்கம், அஞ்சலிதேவி நடிப்பதும் இதைப் பி. புல்லையா டைரக்ட் செய்யப் போவதும்தெரிந்தவிஷயந்தானே!

❀ மாடர்ன் தியேட்டர்ஸார் தங்கள் ஆதித்தன் கனவின் வெற்றியை கண்டுகளித்துக் கொண்டிருக்காமல் அடுத்த படத்திற்கான முயற்சியில் இறங்கிவிட்டார்கள். அவர்களின் அடுத்த சிருஷ்டி '**வைர முடி**'யாக இருக்குமென்று கருதப்படுகிறது. அதிலும் மகாலிங்கம் அனேகமாகத் தோன்றக்கூடுமென்று ஒரு சேலம் செய்தி கூறினல் அதை மறுக்க ஆதாரம் கிடையாது.

❀ ஜெமினியின் 'சக்ரதாரி' தமிழ் மக்களை மிகவும் கவர்ந்துவிட்டது. இன்னும் தியேட்டர்களில் இடம் கிடைக்காமல் பலர் திரும்பிக்கொண்டிருக்கின்றனர் இந்த நிலையில் ராயல் டாக்கீஸாரின்'சுதர்சன்' தமிழ்ப்புத்தாண்டு வெளியீடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சுதர்சன் கோராகும்பர் கதைதான். "நல்ல படங்களையே வெளியிட்டு வரும் ராயல் டாக்கீஸாரின் சுதர்சனும் பிரமாதமாக இருக்குமென்றுதான் எதிர்பார்க்க வேண்டி இருக்கிறது. ஆனல் ஜெமினி சக்ரதாரியுடன்போட்டியிட முடியுமா என்பதுதான் கேள்வி" என்கிறார் ஒருஅன்பர் பொறுத்திருந்து பாருமையா என்று சொல்லி அனுப்பினேன் அன்பரை. இந்த சுதர்சனருக்குத் தாடி உண்டு என்பதை ஞாபகப்படுத்துவதோடு பிரதம பாகங்களைச் சின்னப்பாவும், கண்ணாம்பாவும் ஏற்று நடிக்கிறார்கள் என்பதையும் சொல்லத்தானேவேண்டி இருக்கிறது. சின்னப்பா, கண்ணாம்பா படம் என்றாலே அதற்கு தமிழ் நாட்டில் நல்ல வரவேற்புதான்.



ஹிந்தி சந்திரலேகா

தமிழ் நாட்டையேஒருகலக்குக் கலக்கிய ஜெமினியின் மகோன்னத சிருஷ்டியான சந்திரலேகா ஹிந்தியில் பிடிக்கப்பட்டு இப்போது வடநாட்டில் திரையிடப்பட்டுள்ளது. சென்ற மாதம் 24-ந் தேதி மேன்மை தங்கிய மேற்கு வங்காள கவர்னர் கைலாஸ் நாத் காட்ஜூ அவர்கள் கல்கத்தாவில் ஹிந்தி சந்திரலேகாவை ஆரம்பித்து வைத்த போது "நான் இது போன்ற அற்புதமான படத்தை இதுவரை பார்த்ததே இல்லை. ஒரு மணி நேரம் இருந்துபோகத்தான் வந்தேன். ஆனல் பாதிப் படத்தில் எழுந்து போக எனக்கு மனம் வரவில்லை. நான் அப்போது ஒரு ஸ்வப்ன உலகத்தில்தான் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்" என்று மனதாறப் புகழ்ந்தாரென்றால் அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவருடைய அபிப்பிராயம் மட்டுமல்ல அது. கல்கத்தாவின் லக்ஷக்கணக்கான ரசிகர்களின் ஒருதலைப்பட்சமான தீர்ப்பும் அதேதான்!

24-ந் தேதி கல்கத்தாவில் ஒரே சமயத்தில் 3 தியேட்டர்களில் திரையிடப்பட்டது. இந்த மாத முடிவிற்குள் வடநாடு முழுதும் திரையிடப்படும். ஹிந்தி சந்திரலேகாவிற்காகவே புதிதாக காட்சிகளும், ஆடை அணிகளும் அமைக்கப்பட்டு மறுபடி பிடிக்கப்பட்டது. வடநாட்டு மக்களின் பழக்க வழக்கத்துக்குப் பொருத்தமானதாக சம்பவங்கள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக வசனங்களிலும் ஸ்பஷ்டமான உச்சரிப்புக்கும் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. படத்தின் பலமுக்கிய பாகங்கள் மறுபடி பிடிக்கப்பட்டிருக்கிறது. நடிகர்களில் பலருக்கு இதற்காகவென்றே ஹிந்தி கற்பிக்கப்பட்டு படம் பிடிக்கப்பட்டதாம்.

முதன் முதலில் தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட முதல் ஹிந்திப்படம் சந்திரலேகாதான். வடநாட்டுப் பத்திரிகைகள் முழுதும் ஜெமினியாரின் மகத்தான வெற்றியைப் பற்றியே பக்கம் பக்கமாகப் புகழ்ந்தவண்ணமிருக்கின்றன.

சென்னையில் இம்மாதம் 5-ந் தேதி பத்திரிகைக் காட்சியாக ஹிந்தி சந்திரலேகா வெல்லிங்டனில் காட்டப்பட்டது.

பம்பாய், டில்லி முதலிய வட இந்திய நகரங்கள் முழுமையும் ஜனவரிக்குள் ஹிந்தி சந்திரலேகா திரையிடப்படுவாள். தமிழ் நாட்டில் ஹிந்தி சந்திரலேகா ஏப்ரல் மாதத்தில் பவனிக்கு விடப்படும்.



கடிகாரமோ என்று சந்தேகப்படுகிறீர்களா? இல்லை. இது ஒரு ரேடியோ செட். இது மின்சார அலாரம் கடிகாரத்துடன் கூடியது. நினைத்த ஸ்டேஷனை நினைத்த வேளையில் திருப்பி ரஸிகர்களை உஷார்ப்படுத்தும் சக்தி இதற்குண்டு. மறதியுள்ளவர்களுக்கு இது வசதியான கருவிதானே!

மைசூர் நிருபம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மைசூரைப்பற்றி — அதன் அழகில் மயங்கிவிடாமல் நேருஜி அந்தரங்க வாழ்வையுமறிந்திருக்கிறார் என்பதற்கு ஆதாரமிருக்கிறது. பட்டமளிப்பு விழாவில் டாக்டர் பட்டத்தை ஏற்றுக்கொண்டபின்பு — பேசியபோது "இந்தியாவில் வெகு அழகான நகரத்துக்கு வந்திருப்பது என் பாக்யம்; ஆனால் அழுக்கைப் போக்கிவிட்டு அரண்மனைக்குள் புகுவதுதான் நல்லது" என்று சொல்லியிருக்கிறார். மைசூர் அரசியலின் அந்தரங்கத்தை அவர் அறிந்திருக்கிறார் என்பதற்கு இந்தச்சான்று ஒன்றே போதும்.

பத்திரிகைப் பட்டி

பட்டமளிப்பு விழா ஏற்பாடு சம்பந்தமாகப்பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. விமான நிலையத்தில் நேருஜியை வரவேற்க எல்லாப்பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கும் அனுமதியளித்திருந்தார்கள். ஆனால் அங்கே ஆடு மாடுகளை மறித்து அடைத்துப் போடுவதுபோல் ஒரு குறிப்பிட்ட இடத்தில்வெகு தூரத்தில் அடைத்து வைத்தார்கள். இந்த அவமானத்தைச் சகிக்க முடியாத பல பத்திரிகையாளர்கள் திவானிடம் புகார் செய்தார்கள்.

"முன்பு கவர்னர் ஜெனரலின் விஜயத்தின் போது சில பத்திரிகைக்காரர்கள் நடந்துகொண்ட விதம் எங்கள் முகத்தில் தண்ணீர் வாரி இறைத்தாற்போலிருந்தது—அதனல்தான் இந்தத் தடவை இப்படிச் செய்ய நேர்ந்தது" என்று திவான் திருவாய் மலர்ந்தருளினர். அந்தமட்டும் முன்பு நடந்த சம்பவத்தைத்தம் வாயாலேயே ஒப்புக்கொண்டாரே என்ற திருப்தியுடன் பலர் வெளியேறினர்கள்.

சில ஊழல்கள்

28—12—48 காலை பண்டித நேருஜிக்கு டாக்டர் பட்டம் வழங்க விச்வவித்யா நிலையத்தின் விசேஷப்பட்டமளிப்பு விழா ஏற்பாடு செய்திருந்தார்கள். இத்தகைய பட்டம் வழங்கும் அதிகாரம் செனேட்டுக்குத்தான் உண்டு. இவ்விழாவுக்கு அழைப்பு அனுப்புவதும் செனேட் மூலமாகத்தான்.

விச்வ வித்யா நிலயத்தின் வைஸ் சான்ஸலரின் பெயரில் அனுப்பினலும் அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல — இவ்விரண்டுமின்றி வைஸ் சான்ஸலர், மற்றும் விச்வ வித்யா நிலையத்தின் கௌன்ஸில் சார்பாக அழைப்பு விடுத்திருப்பது ஆச்சரியகரமானதாகும். ஸெனேட்டர்களின் சார்பாகப் பட்டம் வழங்கும்போது அவர்களை முன் வரிசையில் உட்காரவைப்பது வழக்கம். ஆனல், இந்த வழக்கம் தலைகீழாக, அவர்களையெல்லாம் பின் பக்கமும், விச்வ வித்யா நிலயத்தின் வாசனையே அறியாத சிலருக்கு முன்னணியில் இடமளித்தது இன்னும் ஆச்சரியமானது. ஆனல் ஸ்தான கௌரவமுள்ள ஸெனேட்டர்கள் இதை ஒப்புவார்களா? அவர்கள் தங்கள் இடத்திலேயே வந்தமர்ந்தனர். இது ஒருபுறமிருக்கட்டும். விச்வ வித்யா நிலயத்தின் பட்டமளிப்பு விழா விச்வ வித்யா நிலயத்தைச்சேர்ந்தது. இப்படியிருந்தும் விச்வ வித்யா நிலயத்தில் கல்விபெருத, விச்வ வித்யா நிலயத்தில் எவ்விதத்தொடர்புமற்ற சிலபிடாரிகள் அங்கே ஸீட்டுக்களைப்போடும் விஷயத்தில் தலையிட்டார்களென்பது வருந்தத்தக்க விஷயமே.

✸

கலைச் செய்திகள்

நவாபின் ஸ்ரீ ஐயப்பன்

சென்ற $1\frac{1}{2}$ வருஷ காலமாக மதுரையம்பதியில் முகாம் செய்துள்ள நவாப் ராஜமாணிக்கத்தின் தேவி பால கான விநோத சங்கீத சபையார் தமது உயர்தர நாடகங்களை நடத்தி வருகிறார்கள். தற்சமயம் ஸ்ரீ ஐயப்பன் என்ற அற்புதமான நாடகம் 8-வது வாரமாக நடைபெற்று வருகிறது. ஷை கம்பெனியார் தை மாதத்தில் வெளியூருக்கு முகாம் செய்யக் கூடுமெனத் தெரிகிறது.

திண்டுக்கல்லில் 'வஞ்சகி'

திண்டுக்கல்லில் சோலை ஹாலில் முகாம் செய்துள்ள ஸ்ரீ ராம பால கான விநோத சபையார் தற்சமயம் 'வஞ்சகி' என்ற நாடகத்தை நடத்தி வருகிறார்கள்.

கிடைக்கப்பெற்றோம்

முன்னணி

சினிமா போட்டி விமரிசனப் பத்திரிகை. சிறு கதைகளும், சினிமா சம்பந்தமான விஷயங்களும் பகுத்தறிவுப் போட்டி விடை விமரிசனங்களும் கொண்ட பத்திரிகை. ஆசிரியர் க. செ. சுந்தரேசன், விலாசம் 143 வடக்குமாசி வீதி, மதுரை.

தாம்பூலத்திற்கு
மைதீன் புகையிலை மேலானது
E. S. MYDEEN & Co.
இ.எஸ். மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

60 வருடங்கள் புகழ்பெற்றது!
தரு தைலம்
பாம் அஞ்சனங்களின் அரசன்.
தலைவலி, ஜீரம், ஜன்னி, வாய்வுவலி, சுளுக்கு வலி, கட்டிகள் புறப்பாடு ஆகிய 210-வியாதிகளுக்கும் நிகரற்ற நிவாரணி!

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்
தரு மருந்து சாலை......திருச்சினப்பள்ளி

சலவைக்கு சிறந்த சோப்
J. 101
பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்
வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன
ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.
J. 101-பார் சோப்புகள்
வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.
ஜோதி சோப் ஒர்க்ஸ், கரூர்.
J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

REGD. INSIST ON REGD.
Original Wheel Mark Diamonds
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
REGD. (FAMOUS FOR BRILLIANCE) REGD.
CHENNI RADHAKRISHNAN & CO.,
BIG BAZAAR, TRICHINOPOLY.

சிறு கதை

தவமும் பலித்தது

"வேம்பு"

"தவமும் பலித்ததம்மா" என்ற பாட்டின் அடியை எதிர்த்வீட்டு கிராமபோன் பெட்டி ஒலித்துக்கொண்டிருந்தது. மெய்மறந்து அப் பாட்டின் அடிகளை ஜன்னல் கம்பிகளில் தலையை சாய்த்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருந்தேன். சிந்தனை நான்கைந்து மாதங்களுக்குப் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. துடித்துக் கொண்டிருந்த உள்ளத்தின் துயரத்தை மாற்ற ஒரு வழியும் கிடையாதா என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தது உள்ளம். இதயத்து வேதனையை எடுத்துச் சொல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருந்தேன்.

ஹைதராபாத் பிரச்சனை தேசத் தலைவர்களுக்கெல்லாம் எவ்வளவு வேதனையை அளித்ததோ தெரியாது. ஆனுல் தினந் தோறும் "சாமி ஆண்டவனே ஹைதராபாத்துக்கு என்று விமோசனமோ. உயிரோடு நம் கணவர் வருவாரா?" என்று ஏங்கித் தவித்து வேண்டிக்கொண்டிருந்தேன் நான்.

தலையில் பூ வைத்துக்கொள்ளத் தோன்றவில்லை. ஊரில் பலர் பலவிதமாகச் சொன்னுலும் கணவன் கணவன்தானே. பெண் உள்ளத்துக்கு, தெய்வமாகக் கருதும் இதயத்துக்குத் தன் கணவன் உயர்ந்தவனுகத் தான் தோன்றுவான். இவர்களுக்கெல்லாம் அந்த அருமை தெரிகிறதா?

"ஏண்டி பெண்ணே அழுது அழுது முகம் வீங்கறதே. காப்பி சாப்பிடுவதில்லை. கேட்டால் பிடிக்காது என்கிறே. வெறும் மோரும் சாதமும் சாப்பிட்டுண்டு வந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும். ஆத்துக்கார், ஆத்துக்கார் என்று உசிரை விடுகிறயே, தானே வரான். பிள்ளையைப்பற்றி எனக்கில்லா கரிசனமா? ஆம்படையானைத் தேடிண்டு தானே வந்துடருன்!" என்று மாமியார் ஆசையுடனே—வெளிக்காகவோ எப்படியோ கூறினுலும் என்னுல் அப்படி இருக்க முடியவில்லையே.

காப்பி, பூ, வாய்க்கு ருசியான சாப்பாடு, நான் எதெதன் மேலெல்லாம் ஆசையை, உயிரை வைத்திருந்தேனே அதிலெல்லாம் வெறுப்பு ஏற்பட்டது. ஏற்படுத்திக்கொண்டேன். பார்வதி தேவியின் தவத்தைப்பற்றி கதைகளில் படித்திருக்கிறேன். என் தவத்தைப் பற்றி பிறர் புகழ்ந்து சொல்ல முடியாமல் போனுலும் நானே சொல்லித் தானுகவேண்டும்.

இரவு ஒரு மணிக்கு வரும் பாஸஞ்சர் வண்டி ஒன்றுதான் எங்கள் ஊரில் நிற்கும். நிசப்தமான அந்த இருள் வேளையில் வண்டி வருவதற்கு அரைமணி நேரம் முன்பு அடிக்கும் மணி சப்தமும், வண்டி 'கடபுடா' என்று ஒலித்துக்கொண்டு வரும் ஒலியும் 'ஹூம்' என்று பெரு மூச்சு போல் புகைவிட்டுக் கிளம்பும் ஓசையும் தினமும் கேட்டுக் கேட்டு சலித்துவிட்டேன். வண்டி போய் இரண்டு மணி நேரத்துக்கு மேலாகிவிடும். 'ஜலங் ஜலங்' என்ற வண்டி மாட்டு சதங்கைகளின் ஓசை கேட்கிறதா என்று என் காது பாம்பு செவியோலாகிவிடும். 'தவம் பலிக்காதா—மன மாற ஒருவருக்கும் தீங்கு செய்யாத ஏழையை ஏன் சோதனை செய்கிறுய்' என்று எனக்குள்ளேயே விம்முவேன். மணி இரண்டு மூன்றுகூட அடித்துவிடும். நானுக தூங்குவது தெரியாமல் தூங்கிவிடுவேன். தலையணையெல்லாம் சூடான கண்ணீரால் நனைந்திருக்கும்.

இவர்களெல்லாம் என் வேதனையை அறிந்துகொள்ளவேயில்லை. தனிக் குடித்தனம் வைத்த வேப்பிலையைத் தலையில் செருகி, நெற்றியில் பொட்டிட்டு "போய் வாம்மா அவனுக்கு வேளா வேளைக்கு பசியறிந்து சாதம் போடு. அவனுக்கா ஒண்ணும்தெரியாது. அக்கா தங்கைகளோடு வளர்ந்திருந்தால் பாசம்—அன்பு என்பதாவது தெரியும். அதுகூட இல்லை. திருத்திக்கொண்டு வருவது உன் பொறுப்பு" என்று மாமியார் ரயிலேறும்போது கண் துடைத்து நெஞ்சடைக்கச் சொன்ன காட்சி இன்னும் மாறவில்லை. தாம்பத்யப் படகு தள்ளாமல் சென்றுகொண்டிருப்பதாகத்தான் எண்ணியிருப்பார் அவர்.

(2)

புதுக் குடித்தனம் ஹைதராபாத்தில் வைத்து கொஞ்சநாள் இன்பமாகவே கழிந்தது. அம்மா சொன்னபடி இருக்க ஒன்றுமே தெரியவில்லை. 'இன்னும் கொஞ்சம் சாதம் போடு—ரசம் இன்னும் அதிகம் விடு' என்றுகூட கேட்கமாட்டார். "குளிக்க வெந்நீர் எடுத்து வைத்திருக்கிறது" என்றுல் தான் குளிக்கப் போவார். சோப்பு எடுத்துச் சென்றிருக்க மாட்டார். இரண்டு செம்பு வெந்நீரும் மேலே விட்டுக்கொண்டிருப்பார். சோப்பு இல்லையென்பது தெரியவரும். என்னை ஒரு குரல் கூப்பிட்டால் எடுத்துக் கொண்டு ஓடமாட்டேனு? அப்படியே சொட்டச் சொட்ட ரூமுக்கு வருவார், சோப்பு எடுக்க. பிரியமாக இரண்டு மூன்று வருடங்கள் தடையில்லாமல் கடந்தது. 'நீ பாடினுல் தான் நான் சாப்பிட வருவேன்' என்று கொஞ்சுவார் "கன்னு இருக்கு. இந்த நேரத்திலே பாடினு யாராவது எதாவது நெனச்சுக்கப் போரு" என்றுல் "நாலுபேர் சொல்வதற்காகவா நாம் வாழறேம். "நீ பாடினுல் தான் ஆச்சு" என்று பிடிவாதம் பிடிப்பார்.

இப்படி யெல்லாம் புதுமண வாழ்க்கையில் இன்பங்களை முகர்ந்துகொண்டு, இன்ப ஊஞ்சலில் ஒய்யாரமாக ஆடிக்கொண்டிருந்த எனக்கு என் அமைதியை குலைக்க அவள் எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள்.

மற்றொரு பெண்ணுடன் தன் கணவர் சரளமாகப் பழகுவதென்பது எந்த மனைவிக்கும் 'சுருக்' என்றுதான் இருக்கும். பெண் உள்ளம் தன் எதிரேயே நாடகம் நடிக்கப்படுவதைப் பொறுக்காது. கபடத்தன்மை இருக்குமோ என்று கலங்கும் சந்தேக வலையை வீசத் தொடங்கும் நான்மட்டும் அதில்விலக்கா. அவள் 'ரஸியாவோ,' 'ரமியாவோ'—என்ன பேரோ வாயில் நுழையவில்லை. எந்த ஜாதின்னு சொல்லக்கூட முடியாது. இந்தகால நவநாகரிக சின்னங்கள் பூராவுக்கும் தாயகமாக விளங்கினுள். அவள் மினுக்கலும் குலுக்கலும் களுக்கென்ற சிரிப்பும் ஆங்கிலத்தில் கலீர் கலீர் என்று சிரித்துப் பேசுவதும் என் உள்ளத்தை வேதனைசெய்ய ஆரம்பித்தன.

இதற்கேற்றுற்போல்தினமும் ஏழுமணிக்குச் சரியாக வீடு திரும்பும் அவர் பத்து பதினென்று வரையில் வீடு திரும்புவதில்லை. பிறகு சாப்பாடுகூட வேண்டாம் என்று படுத்துவிடுவார். நானும் எவ்வளவுநாளைக்குப் பொறுத்துப் பொறுத்துத் தள்ளுவது? ஒருநாள் கேட்டேவிட்டேன். ஒரு வார்த்தைகூட கோபப் பேச்சாய் என் நெஞ்சில் குத்தாத அவர் அன்று கொடிய வசையைவாரி வீசினுர்.

(3)

புயலும் இடியும் மின்னலும் தான் தினமும் என்றுகியது. ஒழுங்குமுறையோடு கூடிய வாழ்வின் தினசரி நடப்புகள் குலைந்தன. என் வேதனையை யாரிடம் வெளியிடுவது? அவரை அந்தப் போக்கினின்று யார் தடுப்பது? அவள் அவர் வேலைசெய்யும் பாங்கியில் புதிதாக வேலைக்கமர்ந்தவளாம். புது மோகத்தின் போதை அவரை இப்படி நிலை தடுமாறச் செய்யும் என்பதை நான் கனவிலும் எண்ணவில்லை.

'குழந்தை ஒன்றுக்குத் தகப்பனுகப் போகிறீர்கள்' என்று கூறி அவரது கவனத்தைத் திருப்பப் பார்த்தேன். 'உடம்பு ரொம்ப தள்ளாமையாக இருக்கிறது. அம்மாவை வேண்டுமானுல் வரவழியுங்களேன்' என்றெல்லாம் பேச்சைக் கொடுத்து என் வழியில் திருப்பப் பார்த்தேன்.

"வேண்டுமானுல் நாளை காலையிலேயே ரயில் ஏற்றி விடுகிறேன். ஊர் போயேன்?" என்றுவிட்டார் அவர், ஏண்டாப்பா சொன்னேம் என்றுகிவிட்டது. 'ஊருக்கா? அவரை விட்டா?' என்ற நிலையாகிவிட்டது. எந்த வழியிலாகிலும் அவரை சீர்

(அடுத்த பக்கம் பார்க்க)

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனுதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம்,
அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல்
வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

தவமும் பலித்தது

(முன் பக்கத் தொடர்ச்சி)

திருத்தி பழைய வாழ்வின் படிக் கட்டுகளை மீண்டும் அடைவது எனத் திட்டமிட்டு திட்டமிட்டுப் பார்த்தேன். மனம் ஒன்றும் புரியாமல் குழம்பித் துடித்தது.

என் அமைதி குலைந்தது போல் ஹைதராபாத்தின் அமைதியும் குலைந்தது. ஒருவித குறைவுமின்றி இன்ப வாழ்வு நடத்திய மக்களின்வாழ்க்கையை குலைக்க ரஸாக்கர்கள் முற்பட்டனர். ஊரில் எங்கும் கொலை, கொள்ளை, தீ வைத்தல் நடைபெற்றது. இந்தியர்கள் கண்ட இடங்களில் தாக்கப்பட்டனர். "அய்யோ, இவர் வெளியே போகிறாரே. ஜாக்ரதையாகத் திரும்பி வரவேண்டுமே, பகவானே. பழனியாண்டி" என்று வேண்டிக்கொள்வேன்.

"என்ன...... ஒண்டியாயிருக்க எனக்குப் பயமாயிருக்கே........ நீங்க ஜாக்ரதையாக வெளியே போய் வரணுமேன்னு கவலைவேறு" என்று ஒருநாள் என் இதய வேதனை பொறுக்கமாட்டாமல் தெரிவித்தால், "சனியன்மாதிரி என் தொந்தரவு செய்யறே. பயமாயிருந்தா ஊர் போறதுதானே" என்று கூறினார் அவர்.

நாளுக்கு நாள் ரஸாக்கர்கள் அக்ரமம் அதிகமாகிக்கொண்டு வந்தது. ஊரிலிருந்து அம்மா வேறு கடுதாசு மேல் கடுதாசு போட்டுவிட்டாள். இவரே இங்கு இருக்கையில் எனக்கு மட்டும் ஊரில் என்ன வேலை? முதல் பிரசவம் என்பதினால் கணவனை மறக்க வேண்டுமா. கடைசிவரையில் ஊரே பாழாய்ப் போகிறவரை இருந்துதான் தீருகிறது என்ற பிடிவாதத்துடன் இருந்தேன்.

என் வைராக்யம் குலைந்தது. என் கண்ணெதிரே என் தெருவில் அட்டூழியங்கள் நடக்க ஆரம்பித்தன. இரண்டு நாளாக இவரைக் காணோம்.

"நாங்கள் இன்று மெயிலிலேயே ஊர் போறோம். உம் புருஷன் ஆபீஸுக்குக் கூட வரலியாமே" என்று அடுத்த வீட்டுக்காரி கூறினாள். அவர்கள் குடும்பம் அன்றே விழுந்தடித்துக்கொண்டு ஓடிவிட்டது.

எனக்கோ நாளுக்கு நாள் தள்ளாமை அதிகமாகியது. இவரையும் காணமல் நான் என்ன பண்ணுவது! அன்றைய என் நிலையை, என் நினைப்பை, என் வேதனையை, எதிர்காலம் எப்படியாகுமோ என்ற எண்ணத்தை நான் இன்று சிந்திக்கக் கூட முடியவில்லை.

(4)

நான் செய்தது தவறு சரியா என்றுகூட நான் இப்பொழுது எண்ண முடியவில்லை. மேலும் ஒரு வினடி அங்கு இருந்தால் உயிருக்கு மட்டுமெல்லாமல், மானத்துக்குக்கூட ஆபத்து வந்துவிடும் போலிருந்தது. உயிரை நான் அப்பொழுது இழக்கச் சித்தமாயிருந்தேன். ஆனல் மானத்தை இழந்து தீயர்களின் கையில் சிக்கியாவது அங்கு இருக்க ஒப்பவில்லை. கைப்பெட்டியோடும் கூஜாவுடனும் கிளம்பிவிட்டேன்.

இரவு ஒருமணி பாஸஞ்சரில் கண் பஞ்சடைந்து, வேதனையில் உள்ளம் வாடி, இயற்கையாகவே உள்ள தன்மையுடன் ஊர் வந்து கதவைத் தட்டினேன். "வா அம்மா வா. உன் நினைவுதான். நிறைமாச கர்ப்பிணி. அங்கு ஊரெல்லாம் கலாட்டாவாக இருக்கே. இந்த பிள்ளை முன்னேயே உன்னை அனுப்பிடக்கூடாதோ. இன்னும் விளையாட்டுத்தனமாகவே இருக்கானே? இந்தமட்டும் இப்பவாவது ரயில் ஏத்திவிட்டானே. கொண்டு ஊர்வரை வந்து விடப்படாதோ?" என்று மாமியார் அடுக்கிக்கொண்டே போனாள்.

நான் என்னத்தைச் சொல்ல. என் வேதனையைக் கொட்டிவிடலாமா என்றுகூட எண்ணினேன் ஒரு கணம். ஆனல் வார்த்தை வரவில்லை. 'கோ' வென்று அம்மா காலடியில் கண்புதைத்து அழுதுவிட்டேன்.

இந்த நிலையில் நான் விரும்பிய பொருள்கள்பால் வெறுப்படைந்ததில் ஆச்சர்யமில்லையல்லவா. தினமும் ஹைதராபாத் செய்தியை அறிவதிலும், பாஸஞ்சர் வண்டியை எதிர் நோக்குவதிலுமாக நாள் ஓடிக்கொண்டிருந்தது.

நேரடியான வண்டி போக்குவரத்து கூட நின்றுவிட்டது என்ற செய்தி என்னை இடி விழுந்தது போல் செய்துவிட்டது. 'நம் பிரார்த்தனை நிறைவேறிவிடும் என்று எண்ணினேனே. பழனியாண்டவா. இது தான் உன் எண்ணமோ" என்று கூட கதறிவிட்டேன்.

அன்றுதான் புதிதாக எதிர் வீட்டில் கிராமபோன் வாங்கியிருந்தார்கள். கிராமத்தில் அந்த புதுப் பெட்டியைசுற்றி கும்பல். எனக்கென்னவோ அந்த பாட்டைக் கேட்கும்போதெல்லாம் வெறுப்பு.

(5)

இரவு ஒருமணி. மணியடிக்கும் சப்தம் அந்த அமைதியான இருளைப் பிளந்துகொண்டு நன்ருகக் கேட்டது. எனது சோர்வு அன்று என்னை கண்ணயரச் செய்தது. அன்று ஜல் ஜல் என்ற சதங்கை வண்டி வந்திருக்கவேண்டும். 'கடக்' என்று வண்டிக் கம்பியைத் தள்ளி அவர் இறங்கியிருக்க வேண்டும். அன்று அவைகளைக் கவனிக்கத் தவறினேன். 'ராஜி' என்று மெல்லிய குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தேன். அம்மா ஏதேதோ உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. அவரேதான். என்னையே கிள்ளிக்கொண்டு பார்த்தேன். ஒரு கணம் நெஞ்சு அடைத்துக் கொண்டது. எங்கிருந்தோ வேதனை நிரம்பிய உள்ளம் பொத்துக்கொண்டதுபோல் 'கோ' வென்று கதறிவிட்டேன்.

என்னென்னவோ அவர் பேசினார். மன்னிப்பு, மன்னிப்பு என்றெல்லாம் கூறினார். அதெல்லாம் என் காதில் விழவில்லை. அவர் மடியில் தலையைவைத்து இன்பவேதனையில் ஆழ்ந்திருந்த எனக்கு வேறு பேச்சு ஏறுமா.

புது மோகத்தில் அவர் ஆழ்ந்து என்னை வெறுத்ததின் தவறை உணர்ந்தார். இவர் காதலிப்பதாக எண்ணிய அந்த மினுக்குக்காரி இவரையே கையாளாக உபயோகித்து இவர் வேலை செய்யும் பாங்கியை கொள்ளையடிக்க ரஸாக்கர்களுடன் சேர்ந்து கொண்டு திட்டமிட்டதற்கு இவர் ஒப்பாததால் பலாத்காரமாக இவர் எங்கோ கொண்டு செல்லப்பட்டாராம். பிறகு ஒரு கிராம ஜனங்களின் கூட்டு தாக்குதலால் தப்பித்து ஓடிவந்து என்னைத் தேடி அகப்படாமல் இங்கு கிளம்பி வந்திருக்கிருர்.

நெடுநேரம் ரொம்ப விவரித்து இதை அவர் சொன்னர். எப்படித் தப்பித்து வந்தாரோ அதுபற்றி அறிய ஆவல்கொள்ளவில்லை. என் கலிதீர்க்க, வாழ்வை புது வாழ்வாக்க, மறைந்த சந்துஷ்டியைப் புதுப்பிக்க வந்தாரே, போதும் என்று மெய்மறந்திருந்தேன்.

புது பிளேட் ஒன்று எதிர் வீட்டில் வாங்கியிருந்தார்கள். "தவமும் பலித்ததம்மா," என்று தொடங்கும் அந்தப் பாட்டு என் இதயத்தை சாந்தப் படுத்திற்று.

★

ஹிந்தியில் மங்கம்மா

சந்திரலேகாவின் வட நாட்டு வெற்றியைக் கண்டு ஜெமினியார் தங்கள் முதல் சிருஷ்டியான **மங்கம்மா சபதத்தை**யும் ஹிந்திப் படமாக மாற்றி அனுப்ப ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. தமிழில் மங்கம்மாவைப் பார்த்த பல வடநாட்டு நண்பர்கள் "சந்திரலேகாவைப் போலவே ஹிந்திக்கு மாற்றக் கூடிய கதை மங்கம்மா சபதம். பல சிறந்த அம்சங்களைக் கொண்ட மங்கம்மா சந்திரலேகாவிற்கு எந்த விதத்திலும் குறைந்ததில்லை" என்று அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. ஜெமினி மங்கம்மா சபதம் இந்திய சர்க்காரால் அகில உலகக் கண்காட்சிக்கு அனுப்பப்பட்ட சிறந்த நாலுபடங்களில் ஒன்று.

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனுல் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.



ரேகை சாஸ்த்திரம்

"சிவதாஸன்"

கிரக மேடுகள்

சென்ற வாரத்தில் கிரகங்களின் அமைப்பைப்பார்த்தோம். கிரக மேடுகளை நன்ருக பரிசோதிக்காமல் எவ்வித பலனும் சொல்லக்கூடாது. முதல் விரலுக்கடியில் அமைந்திருப்பது குருமேடு. மெல்லிய ரேகைகளால் ஆன முக்கோண சந்தி கொஞ்சம் சதைப்பிடிப்போடு பக்கத்து கிரக மேடைச் சாராமல் இருந்தால் குருமேடு நன்கு அமைந்திருக்கிறது என்று அறிக. ஒரு கிரக மேடு இடம் விட்டு பெயர்ந்து பக்கத்து கிரக மேட்டுக்கு பக்கத்தில் அமைந்திருந்தால் இரண்டு கிரகங்களின் குணங்களும் கலந்திருப்பதைக் காணலாம் கிரக மேடுகளை பார்ப்பதற்கு இரண்டு கைகளையும் பரிசோதிக்கவேண்டும்.

குரு என்ற பெயருக்கு உகந்தபடி இவர்களிடம் உயர்ந்த குணங்களைப் பார்க்கலாம். நல்ல அழகிய தோற்றமும், கட்டுமஸ்தான சரீரமும் உடையவர்கள் இவர்கள் ஜனங்களை ஆளும் ராஜ தந்திரிகளாகவும், தலைவர்களாகவும் இருப்பார்கள். பள்ளிக்கூட உபாத்தியாயர் சிலரிடத்திலும் குருமேடு நன்கு அமைந்திருக்கும். இவர்கள் வெகு உழைப்பாளிகளாகவும், மாணவர்களால் போற்றப்படுபவர்களாகவும் இருப்பார்கள். மதப்பற்றும், பிறரை வசீகரிக்கும் தன்மையும், குளிர்ந்த பார்வையும் உடையவர்கள். மிகவும் பொருப்பு வாய்ந்த உத்யோகங்களை வகிப்பார்கள். வியாபாரிகளானல் தம் கீழ் பல வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு சாமர்த்தியமாக அடக்கியாளும் தன்மை இருக்கும். பெண்களுக்கு குருமேடு நன்கமைந்தால் மிகவும் கம்பீரமான குரலும், சங்கீத தேர்ச்சியும், சபைகளில் பாடும் சக்தியும் இருக்கும்.

நிற்க, கிரக மேடுகளிலும், ரேகைகளின் ஆரம்பத்திலும், மத்தியிலும், முடிவிலும் பல விசேட ரேகைக் குறிகள் இருப்பதை காணலாம். இக்குறிகள் பின்வருமாறு. குரு மேட்டை சுற்றி வளைத்துக்கொண்டு பிறை வட்டம்போல காணப்படும் ரேகை சிலரிடம் காணலாம். இதை 'சாலமன்' ரேகை என்று அழைக்கிருர்கள். ராஜதந்திரியும் முதிர்ந்த அறிவாளியுமான "சாலமன்" அரசனிடம் இது காணப்பட்டதாம். இந்த ரேகை காணப்பட்டால், சிறந்த எழுத்தாளனுகவும், சித்ர வேலைகளில் தேர்ச்சி பெற்றவனுகவும், இருப்பார்கள். குருமேட்டில் கருப்பு புள்ளி காணப்படுவது இவர்கள் செல்வத்தை இழந்ததை குறிக்கிறது. சூலமும், நட்சத்திரமும் இருந்தால் மேலான இடத்தில் கலியாணம் நடக்கும் என்பதை குறிக்கிறது. வலைக்குறியும், தீவும் இருந்தால் தீயகுணங்களும், சீர்கேடான நிலைமையும் அறிவிக்கிறது. கிராசும், புள்ளியுமிருந்தாலும் பிரபலமான கலியாணம் நடக்கும் என்பதும், சில ரேகை நிபுணர்கள் சொல்லுகிருர்கள். சதுரம் காணப்பட்டால், பிரமாதமான எண்ணங்களைக் குறிக்கும். முக்கோணம் காணப்பட்டால் ராஜீய விஷயத்தில் தீவிர நடவடிக்கைகளை குறிக்கிறது. ஒரு கிரகமேடு நன்கு அமைந்து கெடுதலான ரேகைக்குறிகள் இருந்தால் அந்த கிரகத்திற்கு விசேட பூஜைகள், 40 நாட்கள் செய்தால் நல்ல பலன்களை உடனே அடைவார்கள் எனச் சொல்வது வழக்கம்.



1. புள்ளி. (கருப்பு. வெளுப்பு)
2. வட்டம் 3 தீவு. 4. சதுரம்
5. முக்கோணம். 6 தாமரை
7. நட்சத்திரம் 8. வலை.
9 திரிசூலம் 10. சூலம்
11. அருள்குறி 12. குடை.

அடுத்தது சனிமேடு. சனிமேடு இரண்டாவது விரலுக்கடியில் அமைந்திருக்கிறது. சனீஸ்வரன் எல்லா கிரகங்களுக்கும் மத்தியமாக இருந்து, எல்லா கிரகங்களும் கொடுக்கும் கஷ்ட சுகங்களை பகிர்ந்து கொடுக்கிறது. எல்லா கிரகங்களையும் ஆண்டு வருவதும் சனீஸ்வரன். இந்த லோகத்தில் சுகத்தையும், பிரும்ம ஞானத்தையும் கொடுப்பது சனீஸ்வரன். சனிமேடு நன்ருக அமயப் பெற்றிருக்கிறவர்கள், உலகில் மிகவும் விசேடமான மனிதர்கள். இவர்கள் நல்ல உயரமாக இருப்பார்கள். பார்ப்பதற்கு அவ்வளவு அழகான தோற்றம் இருக்காது. அநேகமாக இவர்கள் பருமனுன சரீரம் உடையவர்கள் அல்ல. இவர்களின் நடுவிரல் மற்ற விரல்களை விட அதிக நீளமாக இருக்கும். எப்பொழுதும் தனிமையாகவே இருக்க விரும்புவாகள். வேடிக்கையாக பேசுவது, வாதாடுவது, சிரிக்கப்பேசுவது இவர்களிடம் காணமுடியாது. சுற்றத்தார்களுடன் இருந்தாலும், நல்ல உத்தியோகங்களை வகித்தாலும், இவர்கள் தாம் எப்பொழுதும் தனியாக இருப்பதாகவும், எல்லாம் விதியின் விளையாட்டு என்றும் கருதுவார்கள். இவர்களின் முகத்தோற்றம் எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டும். புத்தகங்கள் படிப்பதிலும், வெளியிடுவதிலும் ஆசை கொண்டவர்கள். பிறருக்காக கடைசி வரை உயிரையும் லட்சியம் செய்யாமல் உதவுவார்கள். கடவுள் பக்தி அதிகம். சனிமேடு மிகவும் அதிதமாக காணப்பட்டால் கடவுள் வழிபாட்டிலேயே அதிகம் காலம் கழிப்பார்கள். இவ்வுலகம் முழுவதும் துக்கம் நிறைந்தது என்ற எண்ணம் உடையவர்களாதலால் இவர்களுக்கு ஆடம்பரங்களும் வெளித்தோற்றமும் பிடிக்காது. மிகவும் சந்தேகம் கொள்வதோடு இவர்கள் எவரையும் நம்புவதில்லை. தங்களுடைய கீர்த்திக்கும், பெயருக்கும் தடங்கல் ஏற்படுவதை சகிக்கமாட்டார்கள். மற்ற கிரகங்கள் நன்ருக அமையாமல் இருந்தால், உயிரை மாய்த்துக்கொண்டாலும் கொள்வர். சனீஸ்வரன் பிரகாசமே சனி ரேகை, அல்லது விதிரேகை என்று அழைக்கப்படுகிறது. இந்தமேட்டின் விசேஷக் குறிகளைப்பற்றியும் சூரிய மேட்டைப்பற்றியும் அடுதத இதழில் சொல்வோம்.

———

புதுக்கோட்டை தபாலாபீஸ்

புதுக்கோட்டை சப்-போஸ்டாபீசாக இதுகாறும் இருந்து வந்ததை புதுக்கோட்டை தலைமைத் தபால் காரியாலயமாக உயர்த்தியிருப்பது குறித்து மகிழ்ச்சியுறுகிருேம். புதுக்கோட்டை பிரதம நீதிபதி திரு பி. ரங்கசரமி நாயுடு அவர்களது முன்னிலையில் சென்ற ஜனவரி முதல் தேதி காலை இந்தத் திருவிழா நடைபெற்றது.

கிடைக்கப்பெற்ருேம்:

திருச்சிதிருவானைக்காவல் சி. ஜி. சாமி எலெக்டிரிக் கம்பெனியின் காலண்டர், திருச்சி பார்த்தசாரதி டுடோரியல் காலேஜ் காலண்டர், சென்னை 'ஹனுமான்' தமிழ்வாரப் பத்திரிகையின் காலண்டர், தஞ்சை ஜில்லா விஜயபுரம் கே. டி. ஆர். வாசனைத் திரவிய நிலயத்தின் தினம் தேதி கிழிக்கக்கூடியகாலண்டர், டோங்ரே கம்பெனியாரின்காலண்டர், சென்னை பி. எஸ், மணி அண் கோ விளம்பரக் கம்பெனியாரின் காலண்டர்.

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப் படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் இடையாது. முப்புவினுல் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு சோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி
சித்த வைத்யசாலை
தர்மாராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

டோங்ரேயின் —
பாலாமருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

சூதகத்தை நிறுத்தியது.

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd., MADRAS.

அமிர்தாஞ்சன்
சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்
அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

TRADE MARK
குவாலிடி காப்பி
திருச்சி

Regd. No. M. 3398 SHIVAJI 9—1—49 Estd. 1935

விந்தை உலகம் 'மூர்த்தி'

சுரங்க வழி அமைக்கும் விதத்தைக் கற்றுக்கொடுத்த பூச்சி!

இது ஒரு விசித்திரமான பூச்சி. நாம் பார்க்கும் கிளிஞ்சல் போன்ற ஒரு பூச்சி. இதற்கு போலாஸ் (Pholas) என்று பெயர். இதை பைல் மீன் (File Fish) என்றும் சொல்லுவார்கள். நம் நாட்டில் தேரை என்று சொல்லப்படும் தவளை இனத்தைச்சேர்ந்த ஒரு ஜந்து இருக்கிறதல்லவா? அதே போலத்தான் இதுவும். ஆனுல் அதைவிட ஒருபடி மேலே இது. இதன் வாசஸ்தலம் உறுதியான சலவைக்கல்லின் நடுபாகம்தான். அவ்வளவு உறுதியான சலவைக்கல்லை இது குடைந்து ஆயிரம் துளை செய்து விடும். ஆனுல் இதன் உடல் மிருதுவானதுதான்.

இது வேலை செய்வதைப்பார்க்க விசித்திரமாக இருக்கும். இதற்கு அகலமான கால்போன்ற ஒரு பாகம் உண்டு. இந்த பாகம் கிளிஞ்சல் போன்ற ஓட்டிலிருந்து வெளியே நீண்டிருக்கும். இதை ஒரு இடத்தில் பலமாக ஊன்றிக்கொண்டு கிளிஞ்சல் ஓட்டை மெதுவாகவும் சுற்றிச் சுற்றியும் நகர்த்தும். இந்த ஓட்டின் மிருதுவான பாகம் முதலில் ஒரு குறி செய்து கொள்ளும். கெட்டியான பாகம் அந்தக் குறியிலேயே துவாரத்தைப் பெரிதாக்கிக் குடைந்துகொண்டே போய்விடும். இந்தச் சுரண்டல் வேலையில் இதன் ஓடு உடைந்து விடுவதும் உண்டு. ஆனுல் அதற்காக இது கவலைப்படுவதில்லை. அதைப்புதுப்பித்துக் கொண்டு சில நாளில் வேலைக்கு உதவும்படியான நல்ல நிலைக்கு கொண்டுவந்து விடும்.

மிஸ்டர் போலாஸ் தன் வாசஸ்தலத்தை சிறு பூச்சியாக இருக்கும் போதே தேர்ந்தெடுத்துக்கொண்டு விடும். குடையச் சாதகமான சலவைக் கல்லைத் தேர்ந்தெடுத்துக் குடைந்து கொண்டே உள்ளே சென்று விடும். குடைந்து உள்ளே செல்லும்போது தன் வழியைப்பல திசைகளில் திருப்பிக்குடைந்து துவாரம் செய்து கொள்ளும். அது வளர வளர அதன் 'ஓடும்' வளரும். அதேபோல தன் வளை வீட்டையும் பெரிதாக்கிக் கொண்டே போகும். சலவைக்கல் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் போனுல்—நுழைந்த துவாரம் வெளிவரமுடியாதபடி மிகச்சிறியதாக இருந்தால்—நடுக்கல்லிலேயே சொஸ்தமாகத் தங்கிவிடும். தன் பாக்கி வாழ்நாளையும் அங்கேயே கழித்து விடும். வெளியே வரமுடியவில்லையே என்று கவலைப்படாது. அது தனக்கு வேண்டிய எல்லா உணவையும்தான் குடைந்திருக்கும் துவாரங்களின் வழியாக உள்ளே வரும் தண்ணீரிலிருந்து—மழைநீர்—எடுத்துக்கொள்கிறது. இதனுல் தன் கிளிஞ்சல் ஓட்டை வேண்டும்போது திறக்கவும் மூடவும் முடியும். தன் சலவைக்கல் வீட்டைப் பிரகாசமாக வைத்துக்கொள்ளும் சக்தி இதற்கு உண்டு. இதன் உடலில் பாஸ்பரஸ் கலந்த ஒருவகை பிசின் உற்பத்தியாகிறது. அது வேறு பொருள்களில் உரசினுலோ அல்லது அதன்மேல் வேறு பொருள் பட்டாலோ அது பளிச்சென்று வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

இந்த அதிசயப்பூச்சியின் அற்புதச் செய்கையைக் கண்டுதான் ஒரு பெரிய எஞ்ஜினீயர் இது கையாளும் முறையை உபயோகித்து லண்டன் நகரின் அடியில் செல்லும் சுரங்க ரஸ்தாக்களை அமைத்தாராம்.

புயல்காற்றுச் செடி

சூறுவளி போன்ற பயங்கரமான புயல்காற்றிலும் தலை நிமிர்ந்து நிற்கும்படியான சில செடிகள் இருக்கின்றன. இதன் இலைகளில் ஏராளமான துவாரங்கள் இருப்பதால் எப்படிப்பட்ட சூறுவளியாலும் இந்தச் செடியை அழிக்க முடியாது. ஏனெனில் காற்று இந்தத் துவாரங்களின் வழியாகப் புகுந்து வெளியே போய்விடுகிறது. சில நாடுகளில் புயல்காற்றிலிருந்து தப்ப வீடுகளைக்கூட இம்மாதிரி ஏராளமான ஜன்னல், கதவு போன்ற காற்றுப்போகும்படியான சாதனங்களுடன் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். இது புயல்காற்றுப் பிரதேசங்களில் மட்டுமல்ல. காடுகளிலும் வளர்கிறது.

சாகாத பூச்சி

பழ மரங்களைத்தாக்கும் ஒருவிதப் பூச்சிகள் இருக்கின்றன. இவைகளை எந்த வகையிலும் கொல்லவே முடிவதில்லையாம். கடுமையான விஷங்களை மரத்தின்கிளை, அடிமரங்களில் தெளித்தாலும் இவை இறப்பதில்லை. இந்தப்பூச்சிகளின் குணம் விசித்திரமானது. ஒரு தடவை இந்தப் பூச்சி ஒரு மரத்தை அடைந்து உட்கார்ந்து விட்டால் அது தன கால்களையும் கண்பார்வையையும் இழந்து விடுகிறது. இது பிறகு நகரவோ, பார்க்கவோ முடிவதில்லை. இதனுல் இதை வெகுநாள்வரை பூச்சி என்று தெரிந்து கொள்ளவே முடியவில்லை. ஒரு செடியின் கணுவில் பல ஆயிரம் பூச்சிகள் இருக்கின்றன. அவ்வளவு சிறியவை. உட்கார்ந்த இடத்திலிருந்தே இது தன் துதிக்கை போன்ற ஒருவகை குழல் போன்ற கருவியை நீட்டி மரத்தினுள் விஷத்தைச் செலுத்துகிறது. அது போலவே தன் ஆகாரமான மரரசத்தையும் உறிஞ்சிக் கொள்கிறது.

இப்போது பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகு இதைக்கொல்ல ஒரு வழி கண்டு பிடித்திருக்கிருர்கள். சில ரஸாயனப் பொருள்களை எரியவிட்டு மிகுந்த சிரமத்தின் பேரில் இதை அழிக்கிருர்களாம்.

அங்கும் இங்கும் 'வாசுகி'



தாய்லாந்து (சயாம்)

தற்போது தாய்லாந்து என்று வழங்கப்படும் சயாம் யுத்தத்தின் போது ஜப்பானியர்களின் முக்கிய ஸ்தலமாக இருந்தது போர்க்கைதிகளை அங்குதான் வைத்திருந்தனர்.

தாய்லாந்து ஒரு அழகான தேசம். விசித்திரமான காட்சிகளை உடைய தேசம். இதன் தலை நகரான பாங்காக் ஒரு பெரிய நதியின் கரையில் அமைந்திருக்கிறது. இந்நாட்டில் வியாபாரமெல்லாம் பெரும்பாலும் நதி மூலமாகத்தான் நடைபெறுகிறது. நதிகளிலேயே மிதக்கும் கடைகள் உண்டு. இந்தக் கடைகள் படகுகளில் கட்டப்பட்டிருக்கும் தட்டிகளால் கூரை போட்டுக் கொண்டு ஒரு சிறு குடிசை மாதிரியே இருக்கும். சந்தை, கடைவீதி எல்லாம் இந்த மாதிரி படகுகளில் தான். நதியில் கூட்டங் கூட்டமாக இப்படகுக் கடைகள் சந்தை பரப்பிக்கூடும். தாய்லாந்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு படகுண்டு.

சயாம்காரர்களுக்கு திருவிழா, உற்சவம், பண்டிகை, கொண்டாட்டங்கள் என்ருல் ரொம்ப ஆனந்தம். இந்தக் கொண்டாட்டக் காலங்களில் படகுப் பந்தயப் போட்டி நடைபெறும்.

தாய்லாந்து மிக உஷ்ணமான தேசம். வெயில் மண்டையைப் பிளக்கும். இங்குள்ள வண்டிகள் அதற்குத்தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கும். வண்டியோட்டியின் தலைக்கு மேலே வண்டியின் கூடு நீண்டு அவனுக்கு நிழல் தரும்படி அமைக்கப்பட்டிருக்கும்.

நம் நாடுகளில் ஐயனர் சிலை போன்ற பெரிய பயங்கரமான உருவங்களை செய்து வைத்திருப்பதைக்காணலாம். அதேபோல சயாமில் பிர்மாண்டமான யாளி போன்ற உருவம் வயல்களில் காவலுக்கு வைக்கப்படுகிறது.

இந்த நாட்டில் ஒருவித விசித்திரமான மீன் இருக்கிறது. அதற்கு பீச்சாங்குழல் மீன் என்று பெயர். நதிக்கரையோரமுள்ள புதர்களில் உட்கார்ந்திருக்கும் பூச்சிகளைக்கண்டதும் இது தன் வாய்நிறைய தண்ணீரை நிரப்பிக்கொண்டு பூச்சிமேல் குறிபார்த்து அடிக்கும். அடியின் வேகத்தில் தாக்குண்டு பூச்சி பொத்தென்று நீரில் விழுந்து மறுநிமிஷம் அந்த மீனின் வயிற்றில் சுகமாக நித்திரைசெய்ய அனுப்பப்படும்!

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka Sitharam (Editor).